விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1848)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 27 வெள்ளிக்கிழமை (09.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 111

## யாழில் மேலும் 136 பேருக்கு கொரோனா
### 88 பேர் திருநெல்வேலி பாரதிபுரத்தைச் சேர்ந்தவர்கள்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்.மாவட்டத்தில் மேலும் 136 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 88 பேர் திருநெல்வேலி பாற்பண்ணைக் கிராமத்தின் பாரதிபுரத்தைச் சேர்ந்தவர்கள் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலைச் சேர்ந்த வயோதிபப் பெண் கொரோனாவால் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த வயோதிபப் 19

## காவல்படை விவகாரம் தேசிய பாதுகாப்பு சபையில் ஆராய்வு

(கொழும்பு)

யாழ். மாநகர காவல்படை விடயம் தொடர்பில் தேசிய பாது 19

## மணிவண்ணன், பார்த்தீபனிடம் பொலிஸார் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் அமைக்கப்பட்ட காவல்படை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்தீபன் மற்றும் யாழ்ப்பாணம் 19

## யாழ்.மாநகர சபையின் காவல்படை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்
### பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண



*(கொழும்பு)*

யாழ்.மாநகர காவல்படை மற்றும் அதன் சீருடை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## 94 ஆயிரத்தை கடந்த தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் மொத்த தொற்று 94 ஆயிரத்தை கடந்துள்ளது.

நேற்றைய தினம் மேலும் 260 பேருக்கு 19

## யாழ்.நகரில் முடக்கப்பட்ட ஒரு தொகுதி வர்த்தக நிலையங்கள் மீளவும் திறப்பு
### உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் சுமார் 70 வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனையவை நேற்றைய தினம் மீளத் திறக்கப்பட்டுள் 19



## கொரோனா இருவர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயி 19

## யாழ்.மாநகரில் பிசிஆருக்கு ஒத்துழைக்காத வர்த்தகர்களின் கடை திறக்க அனுமதி மறுப்பு
### இன்றைய தினம் மாதிரிகள் பெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் 300 பேர் வரை இரண்டாவது பிசிஆர் பரிசோதனையை நடத்தாததால் நேற்று வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

அவர்களுக்கான பிசிஆர் மாதிரிகளை இன்று பெறுவதற்கான நடவடிக்கையை யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி முன்னெடுத்துள்ளார்.

சில வர்த்தக நிலையங்களின் உரிமை 19

## வடமராட்சி கற்கோவளத்தில் கடற்றொழிலுக்குச் சென்ற 3 மீனவர்களை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிக்குச் சென்ற வடமராட்சி கற்கோவளம் மீனவர்கள் மூவரைக் காணவில்லை என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


நேற்று முன்தினம் புதன் கிழமை படகு ஒன்றில் தொழிலுக்குச் சென்ற 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

பிறப்பு
26 – 02 – 1961



இறப்பு
07 – 04 – 2021

## இராசையா விஜயன்

**(ஐங்கரன் பீடா உரிமையாளர் - கரணவாய் மேற்கு)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட இராசையா விஜயன் நேற்று முன்தினம் (07.04.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் றஞ்சினியின் அன்புக் கணவரும் தாட்சாயினி (ஜேர்மன்), ஐங்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்த்தீபனின் (ஜேர்மன்) அன்பு மாமனாரும் ஹரி, அஞ்சனா, ஜசீனா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் (07.04.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவரசந்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(C-1919)

கரணவாய் மேற்கு.
கரவெட்டி.

077 009 1862

தகவல்:-
குடும்பத்தினர்

# இதய ஆராதனைகள்



*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும். (திருக்குறள் - 50)*

*" நீங்கள் மற்றவர்களிற்கு செலுத்தும் அன்பில் இருந்து*
*நீங்கள் என் சீடர்கள் என்பதை நான் அறிந்து கொள்கிறேன் "*

இயேசு பிரானின் அருள் வாக்கிற்கும் திருவள்ளுவரின் திருக்குறளிற்கும் வடிவம் கொடுத்து தமிழினதும் தமிழரினதும் வரலாற்றோடு தம்மை உதாரண புருஷர்களாக இனம்காட்டி புனித நன்னாளாம் பெரிய வெள்ளியில் இறைவனடி சென்ற அந்த இரு மகாமனித புனித ஆன்மாக்களான மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் **அருட்திரு கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை** அவர்களிற்கும் யாழ். மறை மாவட்ட குருவானவரும் திருமறைக் கலாமன்ற ஸ்தாபகரும் இயக்குநரும் புலவரும் **" கலைமுகம் "** காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியரும் சைவசித்தாந்த கலாநிதியுமான **அருட்திரு கலாநிதி நீ. மரிய சேவியர்** அடிகளாரிற்கும் எமது இதயபூர்வமான ஆராதனையை பிரதோஷ நன்நாளில் சிரம் தாழ்த்தி செலுத்துகிறோம்.

(6511)

சிவன்கோவிலடி, கந்தவனம்,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

Constructive Trustee
Jothy Archchiramam.

# மரண அறிவித்தல்



## பூங்காவனம் இரத்தினசிங்கம்

**பிறப்பு : 1944.08.12 இறப்பு : 2021.04.08**

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கு, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட பூங்காவனம் இரத்தினசிங்கம் நேற்று (08.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, கந்தையா, நாகபூரணம் மற்றும் நாகேஸ்வரி (பிரான்ஸ்), இராசம்மா (அச்சுவேலி), தங்கரத்தினம் (மண்டைதீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெகதீஸ்வரி, திருக்கேதீஸ்வரி, விக்கினேஸ்வரன், யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, கமலேஸ்வரன் (ராசன்), ஞானசிங்கம் (புவி - மலேசியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாலன், கிருஷ்ணமூர்த்தி, விக்கினேஸ்வரி, மகேந்திராசா, குலேந்திரநாதன், ஜீவராணி, உதயராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.04.2021) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எரியாள்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1918)

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

076 369 7784
077 741 6327

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தலுக்கு நான் எதிரானவன் ஆனாலும் அரசாங்கத்திற்குச் சார்பானவன்

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலுக்கு நான் எதிரானவன். ஆனாலும் அரசாங்கம் குறித்த தேர்தலினை நடத்தினால் அதனை தடுக்க முடியாதென பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**



மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மாகாண சபைத் தேர்தலுக்கு செல்ல வேண்டிய தேவையில்லை என்பதே எனது நிலைப்பாடா கும். ஒரு நாட்டில் ஒரு சட்ட மொன்று இருந்தால் அது ஒன்பது மாகாணங்களுக் கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும். மாறாக ஒன்பது மாகாணங்களுக்கு ஒன்பது சட்டங்கள் இருக்க முடியாது என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

இருப்பினும் தனிப்பட்ட கருத்தைப் பொருட்படுத்தா மல், நாம் கூட்டாகவே முடிவு களை எடுக்க முடியும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# சீன தடுப்பூசி இலங்கையில் பயன்படுத்தப்படமாட்டாது

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

சீன சினோபார்ம் தடுப்பூ சியின் அவசரகால பயன்பாட் டிற்கு உலக சுகாதார அமை ப்பு ஒப்புதல் அளிக்கும் வரை இலங்கையில் பயன்படுத் தப்படாது என்று சுகாதார அமைச்சு நேற்று வியாழக் கிழமை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேற்று பாராளுமன்றில் உரை யாற்றும்போதே சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி யாராச்சி இவ்வாறு தெரி வித்தார்.



சினோபார்ம் தடுப்பூசி இதுவரை இலங்கையில் உள்ள சீன நாட்டினருக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள் ளது என்றும் இந்த தடுப் பூசி யின் ஆயுள் 2023வரை இரு க்கும் என்று சுகாதார அமை ச்சர் தெரிவித்தார். (நி-4)

# வெப்பமான காலநிலை காரணமாக நீர் விநியோகத்திற்குப் பாதிப்பு

(கொழும்பு)

தற்போது நிலவும் வெப்ப மான காலநிலை காரண மாக நீர் விநியோகத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகா லமைப்பு சபை தெரிவித்து ள்ளது.

இதனால் நீரை அத்தியா வசிய தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்துமாறு அந்தச் சபை அறிக்கையொ ன்றை வெளியிட்டு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பண்டிகைக் காலம் என்ப தால் நீர்ப் பாவனை அதிக ரித்துள்ளது.

நீர் வழங்கல் நிலையங் களில் நீர் மட்டம் குறை வடைந்துள்ளதால் 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு ஒரே அழுத்தத்திலான நீர் விநியோகத்தினை வழங்கு வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் உயர் நில பகுதி களின் பாவனையாளர்க ளுக்கு குறைந்த அழுத்தத்து டனான நீர் விநியோகமே இடம்பெறக்கூடும் என தேசிய நீர்வழங்கல், வடிகா லமைப்புச் சபை குறிப்பிட் டுள்ளது. (நி-4)

# இலங்கை அழகியின் கிரீடத்தை பறித்த உலக அழகி கைது

(கொழும்பு)

திருமதி உலக அழகி கரோ லின் ஜூரி மற்றும் முன் னாள் அழகி சுலாபத் மேந் திரா ஆகிய இருவரும் கறுவாத் தோட்டப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும், வாக்குமூலம் ஒன்றை பெற் றுக் கொள்வதற்கு கறுவாத் தோட்டப் பொலிஸார் நேற்று வியாழக்கிழமை அழைத் திருந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நடத்தப் பட்ட 2021 ஆம் ஆண்டுக் கான திருமதி இலங்கை அழகிப் போட்டியில் இடம் பெற்ற சர்ச்சை தொடர்பில், திருமதி இலங்கை அழகி புஷ்பிகா டி சில்வா, அவர்கள் இருவர் மீதும் முறைப்பாடு பதிவு செய்தமை குறிப்பிடத் தக்கது. (நி-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. சிவானந்தம் ஏகாம்பரம்

(B.Ed,M.Ed)

மு/ அம்பலவன்பொக்கணை ம.வி

இலங்கை அதிபர் சேவை தரம்-I

எமது பாடசாலையான மு/ அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலய அதிபர் திரு.சி.ஏகாம்பரம் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம்-I இற்கு பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புக்களையும் பெருமைகளையும் பெற்று சீருடன் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் குழாம்

மு/அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயம்.


# வர்த்தகர்களுக்கான பி.சி.ஆர்.பரிசோதனை துரையப்பா விளையாட்டரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் முடக்கப்பட்ட பகுதியாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்க ளின் உரிமையாளர் மற்றும் ஊழி யர்களில் இதுவரை பி.சி.ஆர். பரிசோ தனை செய்யாதவர்கள் மற்றும் ஏற்க னவே பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொண்டு இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனை செய்யாதவர்கள் இருப் பின் இன்று 09 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7.30 மணிக்கு துரை யப்பா விளையாட்டரங்கில் நடைபெ றும் பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்வோர் தங்களுக்குரிய பரிசோ தனைகளை மேற்கொள்ளுமாறு யாழ் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளாத எவரும் வர்த்தக நிலையங்களை திறக்கவோ வர்த்தக நிலையங்களில் பணிபுரியவோ அனு மதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் யாழ். நகரில் முடக்கப் பட்ட பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் ஊழியர்கள் எந்த சுகாதாரப் பிரிவை கொண்டிருந்தாலும் அனை வரும் இப்பரிசோதனையில் கலந்து கொள்ள முடியும்.

ஆகவே இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்தி முடக்கப்பட்ட பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்களும் பி.சி.ஆர்.பரிசோத னைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)


10வருட வெற்றிகரமான சேவையில்....

கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது விசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

புதிய பிரிவுகள் ● திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 10/04/2021 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.

இதுவரையில் 175 மாணவர்கள் எமது ஆலோசனை வாயிலாக பயன்பெற்றுள்ளனர்

விசா கிடைக்குமுன்னர் முற்பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

இலுப்பையடி உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்

சங்கத்தானை சாவகச்சேரி.

0779265447 / 0217200989


# 2-ம் கட்டத் தடுப்பூசி 23-ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையின் 2ஆம் கட்டம் எதிர் வரும் 23 ஆம் திகதி தொடக்கம் ஆரம் பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச் சர் பவித்திரா வன்னியாராச்சி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக் கம் ஜூலை மாதம் 6 ஆம் திகதி வரை 2ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவ டிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் தொடரை இழந்தது தென்னாபிரிக்கா
# வெற்றி பெற்றது பாகிஸ்தான்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் 28 ஓட்டங்களினால் வெற்றி பெற்ற பாகிஸ்தான் தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப் பற்றியுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியானது தென்னாபிரிக்காவுடன் மூன்று ஒருநாள் மற்றும் நான்கு இரபது-20 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

முதலில் ஆரம்பமாகிய ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் 3 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றது. அதன் பின்னர் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்கா 17 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இந்நிலையில் தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறு தியுமான ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் செஞ்சுரியனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை பாகிஸ்தானுக்கு வழங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 320 ஓட்டங்களை குவித்தது.

ஃபக்கர் ஜமான் 104 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகள் அடங்கலாக 101 ஓட்டங்களையும் பாபர் அசாம் 82 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடங்கலாக 94 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கேசவ் மகாராஜ் 3 விக்கெட்டுகளையும் ஜடன் மார்க்ராம் 2 விக்கெட்டுகளையும் பெஹ்லுக்வயோ மற்றும் ஸ்மட்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

321 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 292 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதன்மூலம் 28 ஓட்டங்களினால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் 2:1 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக பாபர் அசாமும் தொடரின் நாயகனாக ஃபக்கர் ஜமானும் தெரிவானார்கள். (4-6)

## கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம் - 2021
## 2 வது சுற்றுக்கு யாழ்.சென்றல் அணி தகுதி

கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2021 வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் 28 ஆவது ஆண்டாக நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் 2 ஆவது போட்டி கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்.சென்றல் அணி, ஸ்ரான்லி அணியை 47 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 28 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. காலெப்-50, செந்தூரன்-35, றஜீவ்குமார்-16, மதூஸன்-10 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஸ்ரான்லி அணி சார்பாக கலைச்செல்வன்-6,மதன், ஜெனிஸ் தலா-1 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 23 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றனர். விஸ்னு-22, மதன்-21, சத்தியப்பிரசன்னா-38, கலைச்செல்வன்-22, விதுஸன்-12 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.சென்றல் அணி சார்பாக சுபாதீஸ், மதூஸன் தலா 3 இலக்கினையும் கரிகரன், காலெப் தலா -1 இலக்கினையும் கைப்பற்றினர். (4-6)




## பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் Vivo IPL இன்று ஆரம்பம்

உலகெங்கிலும் உள்ள பல கோடி கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஐ.பி.எல். இருபது-20 லீக் தொடர், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல்.தொடர் இன்று முதல் மே 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முதல் போட்டியில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதவுள்ளன.

சென்னை-சிதம்பரம் மைதானத்தில் இன்று இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகவுள்ளது. (4-6)

## இருபது- 20 உலகக்கிண்ணம்- 2021 இந்தியாவில் நடைபெறும்-ஐ.சி.சி.

2021 ஆண்கள் இருபது-20 உலக் கிண்ணம் நிச்சயம் இந்தியாவில் நடைபெறும் என ஐ.சி.சி. செயல் தலைமை நிர்வாக அதிகாரி ஜெஃப் அலார்டிஸ் தெரிவித்துள்ளார்.

7 ஆவது இருபது-20 உலக கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் எதிர்வரும் ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. புதிய நோயாளர்களின் அன்றாட அடையாளம் ஒரு இலட்சத்தை கடந்துள்ளமையினால் இருபது-20 உலக கிண்ண போட்டி திட்டமிட்டபடி நடக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது குறித்து சர்வதேச கிரிக்கெட் நிர்வாகத்தின் செயல் தலைமை நிர்வாக அதிகாரி நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகங்களிடம் பேசியபோது,

இருபது-20 உலககிண்ண கிரிக்கெட் போட்டியை திட்டமிட்டபடி இந்தியாவில் நடத்துவதற்கான வேலைகளை தொடங்குகிறோம். இந்தியாவில் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு மாற்று திட்டத்தையும் கைவசம் வைத்துள்ளோம். ஆனால் மாற்றுத்திட்டம் குறித்து நாங்கள் இன்னும் எதுவும் விவாதிக்கவில்லை.

இந்திய கிரிக்கெட் நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். அதற்குரிய நேரம் வரும் போது மாற்றுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கையில் இறங்குவோம். இதற்கு என்று காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கவில்லை.

உலகக் கிண்ண போட்டிக்கு இன்னும் பல மாதங்கள் உள்ளன. அதற்குள் சூழ்நிலை எப்படி இருக்கிறது, ஏனைய போட்டிகள் எல்லாம் எப்படி நடக்கின்றன என்பதை பார்ப்போம் என்றும்அவர் கூறினார்.(4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மீளெழுச்சிக்கு முன்னின்று உழைத்து தேசத்தின் வங்கியாளராக வீறுநடைபோடும் இலங்கை வங்கி!

இலங்கையின் வங்கித் துறையில் முன்னோடியாக விளங்கும் இலங்கை வங்கி நாட்டின் பொருளாதார மீளெழுச்சியையே தனது தலையாய இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. இவ்வாறு தன் அயராத உழைப்பின் பயனாக ஈடிணையற்ற முன்னணி வங்கி என்ற பெருமையுடன் இன்னல்மிகு இவ்வாண்டை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

- "சௌபாக்கியா" தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தின் கீழ் அதிகளவான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 39.1 பில்லியன் ரூபாய் பெறுமதியான 18,589 கடன் வசதிகள்.
- 589.4 பில்லியன் ரூபாய்க்கும் மேலான பெறுமதியான கடன் வசதிகளுக்கான தவணைத் தள்ளுபடிகள்.
- வங்கித்துறையிலேயே அதிகளவான இலாபம் -23.6 பில்லியன் ரூபாய் (வரிக்கு முந்தைய இலாபம்).
- மும்மடங்கு 2.0 ட்ரிலியன் ரூபாய் பெறுதியான ஐந்தொகை சொத்துக்கள், கடன்கள், முற்பணங்கள், வைப்புக்கள்.
- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போதான வணிக வளர்ச்சி : சொத்துகள் - 24%, கடன்கள்- 28%, வைப்புக்கள் 23%.

### சவால்மிக்கவொரு ஆண்டு

இன்னல்கள் மிகுந்தவொரு ஆண்டைத் துணிச்சலுடன் எதிர்கொண்டு இலங்கைப் பொருளாதாரத்தை தொடர்ச்சியாகத் தாங்கிப் பிடித்ததிலிருந்து இலங்கை வங்கியானது தானே வங்கித் துறையின் முன்னோடி என்பதை மீண்டுமொருமுறை பறைசாற்றியுள்ளது. 2020 ஆம் ஆண்டு கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக தொடர்ச்சியாக நாடுகள் முடக்கப்பட்டதனால் உலகப் பொருளாதாரம் சரிவுப் பாதையில் சென்றது.

நாட்டின் கொள்கை வகுப்பாளர்களின் வழிகாட்டுதலின்படி வட்டி வீதங்களை ஒற்றை எண்ணாகக் குறைத்தல், கடன் தவணைத் தள்ளுபடி, சலுகைக் கடன் திட்டங்கள் ஊடாக மத்திய வங்கியானது பல நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த நாணயக் கொள்கையினைப் பின்பற்றி பொருளாதாரத்தினைத் தாங்கிப் பிடிக்க பல நடவடிக்கைகள் மேறகொண்டது. இந்நடவடிக்கைகளின் செயலுருவாக்கத்தில் இலங்கை வங்கி ஆற்றிய பங்கு ஈடு இணையற்றது.

வங்கி 2020 ஆம் ஆண்டில் ஆகக்கூடிய இலாபத்தை ஈட்டியிருந்தபோதும் கொடுப்பனவுகள், தீர்ப்பனவுகள் உள்ளிட்ட நாட்டின் வங்கி நடவடிக்கைகள் தங்கு தடையின்றி நடைபெறுகின்றனவா? என்பதிலும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மை மற்றும் உள்நாட்டு தொழில் முயற்சியாண்மை என்பவற்றை மேம்படுத்துவதன் ஊடாக நாட்டின் பொருளாதார மீள் எழுச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலுமே அதன் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்தது.

### பொருளாதாரத்தை மீளெழுச்சி பெறச் செய்தல்

258,000 இற்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கான 589.4 பில்லியன் ரூபாய் பெறுமதியான கடன் வசதிகளின் தவணைகளைத் தள்ளுபடி செய்வதற்காக மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட திட்டத்திற்கு வங்கி தனது முழு ஆதரவையும் வழங்கியது. இத் தவணைத் தள்ளுபடிகள் 5 திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டன. அவையாவன: தவணைத் தள்ளுபடி-சுற்றுலாத்துறை, தவணைத் தள்ளுபடி-கொவிட்-19 முதல் அலை, தவணைத் தள்ளுபடி இரண்டாம் அலை தவணைத் தள்ளுபடி- சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிக்கான கடன் தவணைத் தள்ளுபடி-உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தவணைத் தள்ளுபடி-மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் தவணைத் தள்ளுபடியின் கீழ் உள்ளடக்கப்படாத வாடிக்கையாளர்களுக்கு வங்கி தனது சொந்தக் கடன் தவணைத் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் சலுகைகளை வழங்கியது.

18,000 இற்கும் மேற்பட்ட கடனாளர்களுக்கு 39.1 பில்லியன் ரூபாய் பெறுதியான கடன்களை வழங்கி "சௌபாக்கியா" தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தின் கீழ் அதிக கடன் வழங்கிய வங்கியாக இலங்கை வங்கியே உள்ளது. கொவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கான விசேட கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதன்மூலம் 20.5 பில்லியன் பெறுமதியான கடன் வசதிகளை வழங்கியது.

### ஓர் வலுவான தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குதல்

வங்கியானது, துவண்டு போன பொருளாதாரத்தினைத் தூக்கி நிறுத்தும் நோக்கில் 2020 ஆம் ஆண்டு 128.9 பில்லியன் ரூபாய் கடன்களை வழங்கி சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சித் துறையையும் நுண்நிதித் துறையையும் மேம்படுத்துவதன் ஊடாக வலுவானதோர் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரும்பாடுபட்டது. நாட்டின் அனைத்து மாகாணங்களிலுமுள்ள அனைத்துத் தொழில் முயற்சியாளர்களும் எதிர்கொள்ளும் வணிகச் சிக்கல்களுக்குத் தீர்வினை வழங்கும் வகையில் உயர் முகாமைத்துவமானது அத்தொழில் முயற்சியாளர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

"மிதுரு" நுண்நிதித் திட்டத்தின் மூலமும் 1,083 இற்கும் அதிகமான சிறுசிறு குழுக்கள் பயன்பெற்றதுடன் இதில் கிழக்கு, வடமத்திய, மத்திய மாகாணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

மொத்தமாக 9.3 பில்லியன் ரூபாய் பெறுமதியான கடன்கள் இத்திட்டத்தின் கீழ் குறித்த ஆண்டில் வழங்கப்பட்டன.

இலங்கை வங்கி 'திவி உதான'

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலமும் அவர்களின் நிதிசார் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றனவா? என்பதை உறுதி செய்வதன் மூலமும் நலிந்து செல்லும் பொருளாதாரத்திற்குப் புத்துயிரூட்டும் முகமாக இலங்கை வங்கி 'திவி உதான' திட்டத்தை அறிமுகம் செய்தது.

வங்கியானது அதன் கடன் வசதிகளுக்கான வட்டி விகிதங்களைக் குறைத்துச் சீரமைத்து மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட கொள்கை வீதக் குறைப்புகள் மற்றும் வட்டி வீத எல்லைகள் என்பவற்றை ஒத்த சந்தை வட்டி வீதங்களை மீளாய்வு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தது. வங்கி தனது கடன் புத்தகத்தின் விலையிடலை மீளாய்வு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுத்ததால் மத்திய வங்கி வட்டி வீதங்களைக் குறைத்த மாத்திரத்திலேயே சந்தை வீதங்கள் குறைவடைந்தன.

வங்கி பணப்பரிமாற்றச் சந்தையில் வினைத்திறனுடன் பங்குபற்றியும் நாட்டுக்கு 2.8 பில்லியன் ஐ.அ.டொலர் உள்வரும் பண அனுப்பல்களை ஏற்படுத்திக் கொடுத்தும் பொருளாதார நெருக்கடிக் காலங்களில் இலங்கை ரூபாவின் நிலைபேற்றைப் பேணுதல், வெளிநாட்டுப் பெறுமதியினை வலுப்படுத்துதல் என்ற மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு அரும்பங்காற்றியது.

### தேசிய பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லல்

ஆண்டின் முதற்பாதியில் நாடு முழுமையாக முடக்கப்பட்டபோதுகூட முக்கிய வங்கி நடவடிக்கைகளுக்காக வங்கியின் கிளைகள் திறந்திருந்தன. வங்கியின் தொகுதிக் கிளை, வர்த்தகச் சேவைகள் பிரிவு மற்றும் திறைசேரி என்பன ஒரு நாள்கூட முழுமையாகப் பூட்டப்பட்டதில்லை. நாடு முழுவதிலும் காணப்பட்ட ஊரடங்குப் பகுதிகள், தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றுக்கு வங்கியின் நடமாடும் கிளைகள் நேரிலேயே சென்று சேவையாற்றின. இவ்வாறு நாடு முடக்கப்பட்ட காலத்தில் மாத்திரம் வங்கி 40,000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றியுள்ளது மட்டுமல்லாமல், இக்காலங்களில் சமூக இடைவெளி காரணமாக வங்கிக் கிளைக்கு வருகை தரும் வாடிக்கையாளர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதால் டிஜிற்றல், மெய்நிகர் வங்கியியல் மூலம் வாடிக்கையாளர் சேவை வழங்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் 13 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர் நாள்தோறும் 5.2 பில்லியன் பெறு மதியான கொடுக்கல்-வாங்கல்களை டிஜிற்றல் தளங்களின் ஊடாக மேற்கொண்டுள்ளனர்.

பல ஆண்டுகளுக்கு முன்னதாக டிஜிற்றல் தளங்களின் கட்டமைப்பில் வங்கி ஈடுபடுத்திய மூலதனங்களின் மூலமான இலாபங்களை அறுவடை செய்யும் ஆண்டாக 2020 ஆம் ஆண்டு அமைந்திருந்தது. இக்காலப்பகுதியில் வங்கியின் இணைய, கைபேசி வங்கியியலுக்கான பதிவு மும்மடங்காக அதிகரித்துள்ளது.

பொது ஊரடங்குக் காலங்களில் 1330 இற்கும் மேற்பட்ட ATM, CDM, VRM இயந்திரங்களும் 2000 தொடுதிரைச் சேவைப் பொறிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதோடு அவையாவும் சுகாதார விதி முறைகளுக்கு ஏற்ப முகாமை செய்யப்பட்டன.

### நீண்டகால உறுதிப்பாடும் நிலைபேறும்.

2020 ஆம் ஆண்டின் இலாபத்தில் ஏற்பட்ட சிறு பின்னடைவு வங்கி காலாதிகாலமாகப் பாதுகாத்து வரும் நிலைபேற்றையும் வலிமையையும் அதன் பேண்தகு வளர்ச்சியையும் பாதிக்கா வண்ணம் இலங்கைப் பொருளாதாரத்தின் தூணாக நிமிர்ந்து நின்றது.

வங்கி தனது சொந்தக் கிளை ஒன்றை பிரித்தானியாவின் இலண்டன் நகரில் செயற்படுத்தி வருகிறது. இம்மீளாய்வாண்டில் மாலைதீவுகள், சீசெல்ஸ், இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் முதலான நாடுகள் முடக்கங்கள், பொருளாதார வீழ்ச்சிகள், சமூக இடைவெளி போன்ற இன்னல்களுக்கு முகங்கொடுத்த தால் அந்நாடுகளிலுள்ள கிளைளை நடத்திச் செல்வதற்கு கூடுதல் முயற்சி எடுக்க வேண்டி இருந்தது.





நிலைபேறான எதிர்காலத்தை நோக்கிய
நாற்பெரும் விருதுகள்!

எமது அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் நிலைபேற்றுத் தன்மையின் எண்ணக்கருக்களை உள்ளடக்கிய, இலங்கையின் முதற்தர வங்கியான எமது ஸ்திரத்தன்மைக்கும் அர்ப்பணிப்புக்கும் சான்றாக இலங்கை வணிகக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "2020 சிறந்த நிலைபேறான நிறுவன பிரஜைக்கான விருது" வழங்கும் வைபவத்தில் இந்த நான்கு விருதுகளையும் பெற்றுக் கொண்டமையிட்டு பெருமிதமடைகிறோம்.

- சிறந்த 10 நிறுவனங்களுக்குள் தரநிலைப்படுத்தியமைக்கான விருது
- பொருளாதார நிலைபேற்றுத்தன்மை (இலாபம்) மும்முறை அடித்தள அமைப்புக்கான விருது
- பணியாளர் உறவுகளுக்கான விருது
- நிதிச் செயற்பாட்டுத் துறைக்கான விருது

இந்த வெற்றிகளையீட்ட ஒத்துழைப்பு வழங்கிய எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளருக்கும் ஆளணியினருக்கும் எமது நன்றிகள்.

(C-1312)

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் மூட வேண்டிய தேவையில்லை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

*மாணவர் தொகை வீழ்ச்சியால் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படாது என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்திருப்பதாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.*

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விருந்தினராகக் கலந்து கொண்டபோது,

இருநூறு மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பாடசாலைகளை மூடுவது தொடர்பாக கல்வி அமைச்சு யோசனை செய்து வருவதாகவும் குறித்த யோசனை நடைமுறைப்படுத்தப்படுமாயின் தென்மராட்சியில் மாத்திரம் முப்பது பாடசாலைகளுக்கு மேல் மூட வேண்டிய அபாய நிலை ஏற்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இச்செய்தி தென்மராட்சியில் உள்ள கல்வியியலாளர்கள், சமூக சேவகர்கள் மட்டுமன்றி அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இதன் காரணமாக தென்மராட்சியின் எதிர்கால நிலைமையைக் கருத்திற்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை தென்மராட்சி அபிவிருத்திக் கழக உறுப்பினர்கள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனைச் சந்தித்து விரிவான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டனர்.

குறித்த சந்திப்பின் போது பாடசாலைகளில் மாணவர் தொகை குறைவாக காணப்படுவதால் பாடசாலைகளை இழுத்து மூட வேண்டிய பாதகமான நிலைமை ஏற்படாது என நம்புவதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்திருப்பதாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் தற்போது தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்கள் இணையும் வீதம் மற்றும் ஆரம்ப பாடசாலைகளில் மாணவர் தொகை ஆகியன வெகுவாகக் குறைவடைந்திருப்பதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (5-4-30)




ஊர்காவற்றுறை சுருவில் பிரதான வீதியில் இயங்கிய மதுபானசாலை பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பையடுத்து மூடப்பட்டது. அதனை மீண்டும் திறப்பதற்கு எதிராக தீவகம் சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது . போராட்டத்தின் இறுதியில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளருக்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டது. (படம் :- செ.ரவிசாந்)

# ரயில் மோதி ஒருவர் பலி

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மீசாலை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ரயில் கடவையில் வைத்து ரயில் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10.45 மணியளவில் இடம்பெற்றது.

ரயில் கடவைக் காப்பாளராக நின்ற இளைஞனுக்கு பேச்சுத் துணைக்கு நின்ற நபரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார். கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த ரயில் மீசாலை ரயில் நிலையத்தை அண்மித்த போது கடவைக் காப்பாளர் வீதியில் பாதை தடையை ஏற்படுத்தி விட்டு வீதியின் மறு பக்கம் நின்றதாகவும் ரயில் வருவதனை அறியாத குறித்த நபர் காப்பாளர் நின்ற பக்கமாக கடவையைக் கடக்கும் போது ரயில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கார்த்திகேசு வீதி மீசாலை மேற்கைச் சேர்ந்த 60 வயதான பொன்னர் செல்வராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆதி மயிலிட்டி காசி பூதராயர் ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு வருகை தருவோர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-8)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை யாழ். கிறீன் பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-6)

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் நற்பணிமன்றத்தின் ஒருவருட நிறைவை முன்னிட்டு மேற்படி நற்பணிமன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)




உலக சுகாதார தினத்தை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் புதன்கிழமை நல்லூர், மருதடி வீதியில் அமைந்துள்ள துணைத் தூதரக அலுவலகத்தில் இடம் பெற்றது. (படம்:-ரவிசாந்)

# 'சமுர்த்தி அபிமானி' சிறப்பு விற்பனை சந்தை

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்தியாளர்களை மேம்படுத்தும் நோக்குடன் வலி.வடக்கு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட அளவெட்டி சமுர்த்தி வங்கியின் அனுசரணையுடன் 2021 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி அபிமானி என்னும் தலைப்பில் சித்திரை புத்தாண்டுக்கான உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனை சந்தை, தெல்லிப்பழை சமுர்த்தி தலைமை முகாமையாளர் அ.கியூமன் தலைமையில் இளவாலை வடமேற்கு கிராம செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தி.விஸ்வரூபன் மற்றும் கணக்காளர் இ.முருகதாஸ் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர் இ.சஞ்ஜீபன், உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனையாளர்கள், சமுர்த்திப் பயனாளிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, அருள் மிகு வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இறுதி நாளான எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிறு சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும். (5-4)

# உப பொலிஸ் நிலையம் அமைக்குமாறு வேண்டுகோள்

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வரணிப் பிரதேசம் ஒன்பது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டது.

இங்கு அண்மைக்காலமாக சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குறிப்பாக மண் அகழ்வு, கால்நடைகள் திருட்டு, வழிப்பறி, கொள்ளை, கோஷ்டி மோதல், கள்ளச் சாராய உற்பத்தி போன்றன அதிகரித்துக் காணப்படுகின்றன.

இச்செயற்பாடுகள் பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு கொடிகாம பொலிஸ் நிலையத்திற்கு செல்ல வேண்டிய நிலையுள்ளது.

எனவே இதைக் கருத்திற் கொண்டு வரணிப்பகுதியில் உப பொலிஸ் நிலையம் ஒன்றினை அமைப்பதன் மூலம் மக்களின் சிரமங்களைக் குறைப்பதுடன் சமூக விரோத செயற்பாடுகளையும் தடுக்க முடியும் என பொதுமக்களும் பிரதேச பொது அமைப்பினரும் தெரிவிக்கின்றனர். (5-4-103)

# வீட்டுத்திட்ட எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வரணி பிரதேசமானது எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பரந்த நிலப் பரப்பைக் கொண்ட பகுதியாகும். இங்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்.

அது மட்டுமில்லாமல் பெரும்பாலான மக்கள் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களாகவே உள்ளனர். அரசாங்க வீட்டுத் திட்டங்கள் வழக்கப்படுகின்ற போதிலும் அவை குறைந்த எண்ணிக்கையிலேயே வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே உண்மையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை அரச அதிகாரிகள் நேரடியாக பார்வையிட்டு அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தினை வழங்க வேண்டும் என மக்கள் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றனர். (5-4-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு
31
-
12
-
1939

இறப்பு
01
-
04
-
2011

நாள்—09.04.2021

## தெய்வத்திரு
# திரு.வல்லி தம்பிராசா

ஆண்டுகள் பத்து ஆன போதிலும் நீங்களின்றிய
துயரங்கள் இன்னும் ஆறவில்லை அப்பா!!
எம்மை படைத்த எம் குலதெய்வமே
பணிகின்றோம் உங்கள் பாதம் தொட்டு
அன்பு பெருக அணைத்த கரங்களும்
நாம் ஆழ்ந்து உறங்கிய பாச மடியும்
இன்பம் தரும் தங்கள் இனியசொற்களும்
இன்றியே நாங்கள் இயல்பிழந்தோம் அப்பா!!
பத்து வருடங்கள் கடந்த போதிலும்
உங்களின் நினைவுகள் மனதில் ஓயாத அலைகளாய்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் ஏதோ
ஓரிடத்தில் உங்களின் ஞாபகம் அப்பா
அப்பா மீண்டும் வரமாட்டாரா என ஏங்குவோம் நாங்கள்!
உங்களின் மீதான எங்களின் தேடல்கள்
எங்கள் உயிர் மூச்சு உள்ளவரை ஓயாது!!! எத்தனை பிறவி எடுத்தாலும்
உங்களை போல ஒரு அன்பான அப்பா கிடையாது இவ் உலகில்

(6442)

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி, கலிகை.

077 142 5182

உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில் மகஜர் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் முகமாகவும் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் முகமாகவும் முல்லை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினருக்கும் மாவட்டச் செயலாளருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதோடு பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

முல்லை.மாவட்ட பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சமூகத்தில் இனங்காணப்பட்ட சில பிரச்சினைகள் தொடர்பாகவும் முல்லை. மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கான ஒன்றியம் முல்லை. மாவட்ட செயலாளர் க.விமலநாதன் உள்ளிட்ட மாவட்ட செயலக உயர் அதிகாரிகளினை சந்தித்து கலந்துரையாடியதோடு மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

மாவட்டச் செயலாளர் மகஜரைப் பெற்றுக்கொண்டு நீங்கள் முன்னுக்கு வருகின்ற போது நாமும் உங்களுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வானது முல்லைத்தீவு மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

(5-4-281)

# கிளிநொச்சியில் 24,500 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது பாரிய நீர்ப்பாசன குளங்களிலும் இவ்வாண்டு 26 ஆயிரத்து 573.5 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் அடங்குகின்ற இரணைமடுக்குளம் உள்ளிட்ட 9 குளங்களின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கை கூட்டங்கள் நடைபெற்று பயிர்ச்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் அக்கராயன் குளத்தில் 2 ஆயிரத்து 783 ஏக்கர் நிலப்பரப்பிலும் கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 561 ஏக்கரும் குடமுருட்டி குளத்தின் கீழ் ஆயிரத்து 365 ஏக்கரும் புதுமுறிப்பு குளத்தின் கீழ் 924 ஏக்கரும் வன்னேரிக்குளத்தின் கீழ் முதற்கட்டமாக 123 ஏக்கரும் இரண்டாம் கட்டமாக 123 ஏக்கரும் இரணைமடு குளத்தின் கீழ் சுமார் 17 ஆயிரத்து 775 ஏக்கர் நிலப்பரப்பும் கல்மடுக்குளத்தின் கீழ் ஆயிரத்து 937 ஏக்கரும் என 24 ஆயிரத்து 590 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் அக்கராயன் குளத்தில் 323.5 ஏக்கர், கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 50 ஏக்கர், குடமுருட்டி குளத்தின் கீழ் 25 ஏக்கர், புதுமுறிப்பு குளத்தின் கீழ் 100 ஏக்கர், வன்னேரிக்குளத்தின் கீழ் முதற்கட்டமாக 30 ஏக்கரும் இரண்டாம் கட்டமாக 50 ஏக்கரும் இரணைமடுக் குளத்தின் கீழ் 665 ஏக்கரும் கல்மடுக்குளத்தின் கீழ் 40 ஏக்கர், பிரமந்தனாறு குளத்தின் கீழ் 500 ஏக்கரிலும் கனகாம்பிகை குளத்தின் கீழ் 200 ஏக்கரிலும் உப உணவுச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள ஒன்பது பாரிய நீர்ப்பாசன குளங்களின் கீழ் மொத்தமாக 26 ஆயிரத்து 573.5 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் ராஜ கோபு தெரிவித்துள்ளார்.

(5-4-315)

## கட்டுப்பாட்டையிழந்த ஆட்டோ வேலியுடன் மோதி விபத்து



(நெளுக்குளம்)

வவுனியா பூங்கா வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வீதியூடாக நகரம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டையிழந்து வீதிக் கரையில் இருந்த பாதுகாப்பு வேலியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி காயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(5-4-299)

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய 87 பேர் இதுவரை உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களையும் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியலைந்து துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து வயோதிய ஓய்வுக்காலங்களில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றார்கள்.

இவ்வாறு தமது உறவுகளைத் தேடியலைந்து 87 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 17 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

(5-4-299)



## வவுனிக்குளத்தின் கீழ் 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. வவுனிக்குளத்திற்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முல்லைத்தீவு பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன், மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலாளர்கள், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஸ், மாந்தை கிழக்கு, துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

2,754 ஏக்கரில் நெற்செய்கையும் 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனிக்குளத்தில் உள்ள நீரினை 100 வீதம் விவசாயிகள் சிறந்த முறையில் பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கையினை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் இக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை விவசாயிகள் இறுக்கமாக கடைப்பிடித்து பயிர்ச்செய்கையில் வெற்றியடைய வேண்டும் எனவும் மேலதிக மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

(5-4-350)

## மாணவர்களுக்கான பொருட்கள் இதுவரை பகிர்ந்தளிக்கப்படவில்லை



(நெளுக்குளம்)

கொரோனா பாதிப்பு காரணமாக முன்பள்ளி மாணவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்த வழங்கப்பட்ட கைகழுவும் உபகரணங்கள் வவுனியா பிரதேச செயலகத்தில் நீண்ட நாட்களாக தேங்கி காணப்படுகின்றன.

மகளிர் மற்றும் சிறுவர் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஊடாக உலக வங்கியினால் வழங்கப்பட்ட குறித்த பொருட்கள் முன்பள்ளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

எனினும் வவுனியா பிரதேச செயலகத்தில் அவை பகிர்ந்தளிக்கப்படாமல் காணப்படுகின்றன.

கிராமப்புறங்களில் உள்ள பல முன்பள்ளிகள் போதுமான வசதிகளின்றி சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் நிலையில் பிரதேச செயலகத்தில் ஒரு மாதத்திற்கும் மேலாக குறித்த பொருட்கள் தேங்கிக் கிடப்பது தொடர்பில் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளரிடம் கேட்ட போது,

குறித்த அமைச்சினூடாக பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் அமைச்சினூடாகவே வழங்கப்பட வேண்டும் என எமக்கு தெரிவிக்கப்பட்டமையால் பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அவர்களினூடாக திகதி தந்ததன் பின்னர் வழங்கி வைக்கப்படும் என தெரிவித்தார்.

(5-4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

09.04.2021
பங்குனி 27, வெள்ளிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 5.53 மணிவரை
சதயம் காலை 6.48 மணிவரை
சுபநேரம் 6.07 - 7.37 மணிவரை
இராகு காலம் 10.37 - 12.07 மணிவரை
சந்திராஷ்டமம்:- ஆயில்யம்
பிரதோச விரதம். வளவன்


மேஷம்
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


ரிஷபம்
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்
கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்.


கடகம்
மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.


சிம்மம்
சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், கனவு பலிதமுண்டு, காரிய அனுகூலமுண்டு.


கன்னி
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருமானம் பெருக வழி கிடைக்கும்.


துலாம்
வியாபார விருத்தியுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்


விருச்சிகம்
வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


தனுசு
மனதில் புதிய கற்பனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மகரம்
தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.


கும்பம்
விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்
வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

மற்றவர்களுடைய துன்பங்களை உணர முடியாதவன் மனித உருவத்திலுள்ள விலங்காவான்.

# தடுப்பூசி கொள்வனவு குறித்து அமெரிக்காவுடன் பேச்சு

(கொழும்பு)

ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசியை கொள்வனவு செய்வது குறித்து அமெரிக்காவுடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் மூலம் அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனத்துடன் இலங்கை பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடந்தால் தடுப்பூசியை கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.

ஜோன்சன் அன்ட் ஜோன்சன் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு அமெரிக்க கட்டுப்பாட்டாளர்கள் முறையாக ஒப்புதல் அளித்துள்ளனர்.

இந்த தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (நி-4)




# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 19 கலீபா அப்துல் காதர் வீதி ஆதன இல.168 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் M.S.M.குசேன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு J.S.A.மதுரநாயகம் முகதாவில் 2911ம் இலக்க 26.09.2016ம் திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் அப்துல் காதர் முஹம்மது பதூர்தீன் (453172228V) உம் பெண் முஹம்மது பதூர்தீன் அக்தாறுன்னிஸா (555263139V) உம் ஆகியவர்கள் குறித்த ஆதனம் தமக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணம் கலீபா அப்துல் காதர் வீதி இல168ச் சேர்ந்த அப்துல் காதர் முஹம்மது பதூர்தீன் உம் பெண் முஹம்மது பதூர்தீன் அக்தாறுன்னிஸ்வும் அறுதியாக பிரசித்த நொத்தாரிசு M.S.F.Roshana முகதாவில் வரையப்பட்ட 766ம் இலக்க 26.11.2019ம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை மொகமட் உசனார் மொஹமட் தாஹிர்க்கு வழங்கியுள்ளார்.

பின்னர் அதே முகவரியைச் சேர்ந்த முஹம்மது உசனார் முஹம்மது தாஹிர் மற்றும் பெண் ஜுனைத்தா பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 1798ம் இலக்க 30.09.2020ம் திகதிய அறுதி உறுதி மூலம் இல.08 அசனாலெப்பை ஒழுங்கை யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த றஜப் அஸ்கர் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் கிராம சேவையாளர் பிரிவு J/86 யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட "பிச்சைக்குளம் கரை" பதினேழு தசம் எட்டு ஐந்து குளிகள் கொண்ட ஆதனமும் இக்காணிக்குள் இருக்கும் கிணறு பயிர்வகைகள் உள்ளிட்டவையும் இதன் எல்லைகள்.

கிழக்கு:- K.I.M. பெண் அனீஷாவின் ஆதனமும் ஆறுமுகம் மகேந்திரராசாவின் ஆதனமும்.
வடக்கு:- கலீபா அப்துல் காதர் வீதி.
மேற்கு:- முகமட் றுஷான் பாத்திமா ரீசானாவின் ஆதனம்.
தெற்கு:- ஆறுமுகமும் மகேந்திரராஜாவின் ஆதனம்.
இதடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளும்

தற்போது றஜப் அஸ்கர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது றஜப் அஸ்கா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(C-1908)

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு தாக்குதல் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை- சாணக்கியன்

(கொழும்பு)

அரசாங்கம் தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள 2021 ஆம் ஆண்டளவில் இன்னொரு தாக்குதலுக்கும் திட்டமிட்டால் கூட சந்தேகப்படுவதற்கில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், "சர்வதேச ரீதியாக இலங்கை மக்களுக்கு நல்லதொரு பெயர் உள்ளது. சுற்றுலா வாசிகளுடன் நட்புறவுடன் பழகும் மக்களாகவே இலங்கையர்கள் இருந்து வருகிறார்கள்.

முஸ்லிம்கள் வியாபாரம் செய்வதில் சிறந்தவர்கள். இவ்வாறானவர்களை ஊக்குவித்து நாட்டின் அபிவிருத்திக்கு ஏதேனும் பலனை பெற்றுக்கொள்ளத்தான் நாம் முயற்சிக்க வேண்டும்.

ஆனால் அதனை விடுத்து, அவர்கள் தயாரிக்கும் உணவில் கருக்கலைப்பு மாத்திரை கலக்கப்பட்டுள்ளதாகவும் முஸ்லிம் வைத்தியர்கள் கருக்கலைப்பில் ஈடுபடுவதாகவும் அந்தச் சமூகம் தொடர்ச்சியாக தாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.


தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை காரணமாக 30 வருடகால யுத்தம் இடம்பெற்றது. அதேபோன்று முஸ்லிம் சமூகம் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளை வைத்துக் கொண்டு அரசியல் செய்ய முற்படக்கூடாது. அரசாங்கம் தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள 2021 ஆம் ஆண்டளவில் இன்னொரு தாக்குதலுக்கும் திட்டமிட்டால் கூட சந்தேகப்படுவதற்கில்லை.

ஏனெனில், இவர்கள் தான் கடந்த காலங்களில் சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கியவர்கள். அவரைப் போன்ற ஒருவர் மீண்டும் இந்த அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கலாம். இது தொடர்பாக நாட்டு மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# பொன்சேகாவை தகாத வார்த்தைகளால் திட்டிய சமல் ராஜபக்ஷ





(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை காலை குறிப்பாக ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட விவகாரத்தினாலேயே அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் பெயரைக் குறிப்பிட்டு சரத் பொன்சேகா ஒரு சில கருத்துக்களை பகிர்ந்திருந்தார்.

இதன் காரணமாக இருவருக்கும் இடையில் வார்த்தைப் போர் இடம் பெற்றிருந்தது.

"2010 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கிடையில் நான் அன்றைய அரசாங்கத்தால் அநியாயமாக நடத்தப்பட்டேன்" என சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

"தனக்கு விதிக்கப்பட்ட தேவையற்ற தண்டனையைத் தொடர்ந்து என்னை பாராளுமன்றத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு மேன்முறையீடு செய்திருந்தேன்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது கடுமையாக கோபமடைந்த சமல் ராஜபக்ஷ, "பொன்சேகா ஒரு கழுதை, முடிந்தால் வெளியே வரவும்" என சவால் விடுத்திருந்தார்.

இதனை அடுத்து பரபரப்பான சூழ்நிலை நிலவியது. பதற்றமான சூழ்நிலையை அடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்ட பாராளுமன்ற நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமானது. இதன்போது சமல் தான் கூறிய விடயங்கள் யாரையும் புண்படுத்தியிருந்தால் மன்னிப்புக் கேட்க விரும்புவதாக தெரிவித்தார். (நி-4)

# ரஞ்சனின் பதவி வெற்றிடத்திற்கு அஜித் எதிர்க்கட்சியினர் கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பு

(கொழும்பு)

கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற ஆசனத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அஜித் மன்னப்பெருமவின் பெயர் அறிவிக்கப்பட்டமைக்கு எதிர்க்கட்சியினர் நேற்று வியாழக்கிழமை கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதனால் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையைத் தொடர்ந்து பாராளுமன்ற நடவடிக்கைகள் 5 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற ஆசனம் குறித்து சபாநாயகர் எடுத்த முடிவை எதிர்த்து எதிர்க்கட்சி உறுப்பினர் நேற்று கறுப்புப்பட்டிகளை அணிந்திருந்ததோடு, பதாகைகளையும் ஏந்தி எதிர்ப்பு வெளியிட்டனர்.

கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாக உள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று முன்தினம் அறிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற பொதுச் செயலாளர் தேர்தல்கள் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில் அஜித் மன்னப்பெருமவின் பெயர் ரஞ்சனின் வெற்றிடத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதனைவர்த்தமானியில் வெளியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன் றில் எதிர்க்கட்சியினர் கறுப்புப்பட்டி அணிந்து [illegible] (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழத் தெரியாதவர்கள்!

ஒரு ஊரிலே ஒரு ஆள் இருந்தான். நிறைய பணம் சேர்த்தான். அவனுக்குச் சம்பாதிக்கத் தெரியுமே தவிர செலவு செய்யத் தெரியாது. மகா கஞ்சன். காசை கையில் எடுக்கவே மாட்டான். எடுத்தால் செலவு செய்ய வேண்டியிருக்குமே. அதனால் இப்படியே அவன் காலத்தை கழித்துவிட்டான். வயசாகிவிட்டது. அவனுடைய மனைவி ஒரு நாள் கேட்டாள். இவ்வளவு நாளாக நீங்கள் என்னை எங்கேயுமே அழைத்துக் கொண்டு போனதில்லை. இப்பொழுதாவது அழைத்துக் கொண்டு போகக் கூடாதா? என்றாள்.

எங்கே போக வேண்டும் சொல் என்றான்.

காசிக்குப் போக வேண்டும். கங்கையில் குளிக்க வேண்டும் என்றாள். இவன் பார்த்தான். இதற்கு ஏன் அவ்வளவு தூரம் செலவு செய்து கொண்டு போக வேண்டும். எங்கள் ஊர் ஆற்றிலேயே குளிக்கலாமே இதுவும் புண்ணிய நதி தான். இங்கே குளித்தால் அங்கே குளித்த பலன் கிடைத்துவிடும் என்றான்.

சரி என்று இரண்டு பேருமாக ஆற்றங்கரைக்குப் போனார்கள். அன்றைக்கு ஏதோ விஷேசம். நிறைய பேர் குளித்துக் கொண்டிருந்தார்கள். கரையில் சில புரோகிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள். குளிப்பதற்கு முன் அவர்களிடம் உட்கார்ந்தால் ஏதோ மந்திரம் சொல்லுவார்கள். சிறுதொகை காசு கொடுக்க வேண்டி யிருக்கும்.

அதனால் இவன் என்ன செய்தான் தெரியுமா? ஆற்றங்கரையில் சிறிது தூரம் போனான். ஊரை விட்டுத் தள்ளி வந்துவிட்டான். அங்கே யாருமே இல்லை. அப்பாடா என்று சந்தோசப்பட்டான். குளிக்கலாம் என்று புறப்பட்டான்.

இந்த நேரம் கடவுள் பார்த்தார். இந்தக் கஞ்சனுக்கு ஏதாவது புத்தி புகட்ட வேண்டும் என்று நினைத்தார். உடனே ஒரு புரோகிதர் மாதிரி உருவத்தை மாற்றிக் கொண்டு அந்த ஆள் முன்னால் வந்து நின்றார்.

அவனுக்கு அதிர்ச்சி .. இங்கே யாருமே இருக்க மாட்டார்கள் என்று நினைத்தால்.. இங்கேயும் ஒரு ஆள் வந்துவிட்டாரே..என்ன செய்வது என்று யோசித்தான். புரோகிதர் உருவத்திலே இருந்த கடவுள் சொன்னார்.

இதோ பாருங்கள்.. இன்றைக்கு விஷேச நாள்.. நீராடுவதற்கு முன்னர் சுயகல்பம் செய்வது நல்லது என்றார். என்னிடம் பணம் எதுவுமில்லையே என்றான். பரவாயில்லை பின்பு கொடுங்கள்... வாங்கிக் கொள்கின்றேன். ஆனால் ஒன்று எவ்வளவு கொடுப்பீர்கள் என்பதை மட்டும் இப்பொழுதே சொல்லி விட்டீர்கள் என்றால் நல்லது என்றார்.

இவன் மிகவும் யோசனை செய்து,

ஒரு பத்து ரூபாய் தருகின்றேன்.. என்றான். சரி என்று ஏற்றுக் கொண்டு எல்லா கிரியைகளையும் செய்தார். அதற்குப்பின்பு கணவனும் மனைவியும் ஆற்றிலே குதித்தார்கள். அவர் போய்விட்டார்.

சிறிது நாள் கழித்து அவன் வீட்டுக்கு வந்தார். கடனை வசூல் செய்வதற்கு. வாசலில் நின்று கொண்டிருந்த அவன் மனைவியிடம் விடயத்தைச் சொன்னார். அந்த அம்மா ஓடிப்போய் உள்ளே இருந்த தன் கணவரிடம் சொன்னார். அவன் யோசனை செய்தான்.

இப்பொழுது வெளியில் போனால் அவனுக்குப் பத்து ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும். அதனால் எனக்குக் காய்ச்சல் என்று அந்த ஆளிடம் இன்னொரு சந்தர்ப்பத்தில் என்னை வந்து பார்க்கச் சொல்லு என்றான். அந்த அம்மா போய் சொன்னார்.

அப்படி என்றால் அவரை நான் உடனே போய்ப்பார்க்க வேண்டுமே என்று ஆரம்பித்தார் இவர். அவர் மறுபடியும் உள்ளே ஓடி வந்து விடயத்தை சொன்னார். இது ஏதுடா வம்பாய் போய்விட்டது என்று நினைத்தான். மனைவியை அருகிலே கூப்பிட்டான். இதோ பாரு ஜன்னி கண்டு நான் இறந்து போனதாகச் சொல்லிவிடு என்றார். அவரும் சொன்னார்.

புரோகிதர் பார்த்தார் அப்படி என்றால் ஒரு வழியாக இருந்து அவருடைய இறுதிச் சடங்குகளையும் நானே முடித்துவிட்டுப் போய்விடுகின்றேன் என்றார். உள்ளே இருந்தவன் யோசித்தான். "அந்த ஆள் என்னை விடமாட்டான் போல இருக்கு. அதனால் ஒரு சவப்பெட்டியில் என்னை வைத்து தூக்கிக் கொண்டு மயானத்திற்குப் போங்கள்...பார்த்துக்கொள்ளலாம்" என்றான்.

புரோகிதரும் விடுவது மாதிரி இல்லை. கூடவே நடந்து போனார். அங்கே இறக்கி .. சடங்குகளை முடித்துவிட்டு.. தீ வைக்கின்ற நேரம்! பெட்டிக்குள்ளே இருந்த நம்ம ஆள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான். புரோகிதர் உருவத்திலே இருந்த கடவுள் சிரித்தார். தன் சுய உருவத்தைக் காட்டினார். அதற்குப் பின்பு அவனைக் கூப்பிட்டு இதோ பாரப்பா .. ஏன் இப்படி அல்லாடுகின்றாய் ஏதாவது வரம் வேண்டும் என்றால் கேள் தருகின்றேன் என்றார். அவன் யோசனை செய்தான். பகவானே ஒரே ஒரு வரம் தான் உங்களிடம் கேட்க வேண்டும் என்றான். என்ன வேண்டும் கேள் என்றார். அந்தப் பத்து ரூபாய் தட்சணையை தள்ளுபடி செய்தால் அது போதும் என்றான்.

கடவுளும் சரி என்று சொல்லிவிட்டு போய்விட்டார். இப்படி ஒரு கதையை சுவாமி சிவானந்தர் சொல்லியிருக்கின்றார். செல்வந்தர்கள் பல பேர் இப்படித் தான் இருக்கின்றார்கள் தாங்களும் அனுபவிக்கமாட்டார்கள். அடுத்தவர்களுக்கும் கொடுக்க மாட்டார்கள். இது மாதிரியான கஞ்சர்களுக்கு இவ் வுலகமும் இல்லை. அவ்வுலகமும் இல்லை என்கின்றார் அவர்.

இந்தக் கதையிலே கடவுள் கடன் வசூலுக்கு வந்தது மாதிரி.. எங்கள் ஊர் ஆள் ஒருத்தன் இன்னொருத்தனிடம் பத்து ரூபாய் கடன் கொடுத்துவிட்டான். திருப்பி வாங்க நடையா நடக்கின்றான்.

கடைசியாக கேட்டான். நீ எப்பொழுது தான் கடனைத் திருப்பித் தரப் போகின்றாய் அதை முடிவாக சொல்லு என்றான். வருகின்ற வியாழக்கிழமை கண்டிப்பாக கொடுத்துவிடுவேன் என்றான் அவன். அன்றைக்கு நான் ஊரிலே இருக்க மாட்டேனே என்றான் இவன். அதனால் என்ன நானும் தான் அன்றைக்கு ஊரிலே இருக்க மாட்டேன் என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்தவர்கள் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி சிலாவத்துறை, கொண்டச்சிக்குடா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 4 முச்சக்கர வண்டிகள் சோதனையிடப்பட்டன.

அந்த முச்சக்கர வண்டிகளில் பயணித்த 20 பேரும் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல ஆயத்தமாக இருந்ததாக கடற்படையினர் தெரிவித்தனர். (நி-4)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 08 கொழும்புத்துறை வீதி ஆதன இல 236 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் சம்பந்தர் மாணிக்கவாசகரும் Dr.வெற்றிவேலும் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமும் அதனுள் உள்ளடங்குகின்ற 1ம் ஆதன இடாப்பில் நில.பர 6 உம் 2ம் ஆதன இடாப்பின் படி நில.பர(2) குளி (13.6) விஸ்தீரணமான ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 679ம் இலக்க 25.08.2012ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் யாழ்பாணம் இராசாவின்தோட்டம் இல22 இலிருந்து தற்காலம் ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்து வரும் திருமதி.சிவகுமாரி தயாபரன் தனது அற்றோனித்தத்துவக்காரரான தில்லையம்பலம் சிறிதரன் ஊடாக வெளியிட்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை மேற்கு கந்தர் சுப்பிரமணியம் வீதி வைத்திலிங்கம் கிருபாகரனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த 679ம் இலக்க உறுதியில் தாயுறுதியின் விபரமாக இவ்வாதனம் 1934ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி நொத்தாரிசு பி.காசிப்பிள்ளை முன்பாக 530ம் இலக்கத்தில் திருமதி.சிவகுமாரி தயாபரன் இன் பெற்றோர் காலஞ்சென்றவர்களான டாக்டர்.சண்முகம் அப்பாக்குட்டி வெற்றிவேலும் பெண் பராசக்தியும் ஆகியவர்களுக்கு நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அவர்களுக்கு கொள்வனவும் ஆட்சியுமாயிருந்து அவர்கள் சீவிய காலத்தில் எவ்வித பராதீனமும் செய்யாமலும் மரணச்சாதனம் நிறைவேறாமலும் விட்டிறக்க எனக்கு பெற்றோர் வழி உரித்தும் எனதாட்சியுமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "ஆசைவளவும் பெரிய வளவும் திடலிற் புலமும்" உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை 22.08.1979ம் திகதியில் அளந்து வரையப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நில.பர(6) ஆறு அதற்குச் சேர்ந்தவைகளும்.

இதன் எல்லை:-

குறித்த படத்தில் துண்டு 7 எனச்சுட்டப்பட்ட 14 அடி அகலமான பாதை நிலம் (2ம் ஆதன இடாப்பில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளது)

வடக்கு:- கொழும்புத்துறை வீதி.
மேற்கு:- நாகமுத்து கந்தையாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனமும் வாய்க்காலும்.
தெற்கு:- குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனம். இதடங்கலும் 2ம் ஆதன இடாப்பு.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிகோவிற்பற்று சுண்டிக்குளி இறை "ஆசைவளவும் பெரிய வளவும் தீவிற் புலமும்" உத்தரவு பெற்ற அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை 22.08.1979ம் திகதியில் அளந்து வரைந்த (1-8 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்து) 952ம் இலக்கத்தின்படி துண்டு 7 எனச்சுட்டப்பட்ட பாதை நிலம் விஸ்தீரணம் நில.பர(2) இரண்டு குளி (13.6) பதின்மூன்று தசம் ஆறும் (அகலம் 14 அடி) அதற்குரியவைகளும்.

இதன் எல்லை:-

கிழக்கு:- குறித்த படத்தில் துண்டு 3 துண்டு 4 துண்டு 5 துண்டு 6 எனச் சுட்டப்பட்ட பாகங்கள்.
வடக்கு:- கொழும்புத்துறை வீதி.
மேற்கு:- துண்டு 1 (1ம் ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ளது) துண்டு 2 துரைச்சாமியின் ஆதனம்.
தெற்கு:- குறித்த படத்தில் துண்டு 8 எனச்சுட்டப்பட்ட பாகம் இதடங்கலில் பாதை பாவிப்புரித்தும்.

தற்போது வைத்திலிங்கம் கிருபாகரன் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வைத்திலிங்கம் கிருபாகரன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(C-1909)

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# JOB வேலை வாய்ப்பு

## அருள்மிகு ஸ்ரீ கிருஸ்ணர் ஆலயம்-கிளிநொச்சி

## முகாமையாளர் பதவி வெற்றிடம்

எமது ஆலயத்திற்கு மேற்படி பதவிக்கு முகாமையாள் முன்னனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. ஆண் பணியாளர், 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், கணக்கியல் அறிவு கொண்டவரும், சமய ஆசாரங்களை கொண்டவரும், இறைபணியை முன் வந்து செய்யக் கூடியவராக இருப்பவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையுடன் 077 288 0830 தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு நேரிலும் அல்லது செயலாளர், அருள்மிகு கிருஸ்ணர் கோவில், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 18.04.2021 முன் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:- ஆலய சுற்றாடலில் இருப்பவர்கள் அல்லது ஆலயத்தில் தங்கி நின்று பணி செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.**

(C-1911)

**க.சவுந்தரராசா,**
**செயலாளர்,**
**ஆலய பரிபாலன சபை, கிருஸ்ணர் ஆலயம், கிளிநொச்சி.**

## தேர்தல் ஆணைக்குழு

**வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்**

தேருநர் இடாப்புக்கள் மீளாய்வு - 2020
பகுதியளவில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பிரதேசங்களின் வாக்காளர்களை பதிவு செய்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான விசேட அறிவித்தல்

வட மாகாணத்தில் பகுதியளவில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத கீழ் குறிப்பிடப்படும் கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த மற்றும் 2020 தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் நபர்களின் பெயர்ப் பட்டியல் அப் பிரதேசங்களின் கிராம அலுவலர் அலுவலகங்களில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk இணையத்தளத்தில் 2021.04.16 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்தப்படும்.

2020 ஆம் ஆண்டில் பதிவுக்காக பரிந்துரை செய்யப்படாத ஆனாலும் உயிர் வாழும் நபர்கள் 2021.04.27 ஆம் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பப் படிவத்தின் மூலமாக உரிய மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அறியத் தரவும். இந்த விண்ணப்பப் படிவத்தை மேலே பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காட்சிப்படுத்தப்படும் இடங்களில் பெற்றுக்கொள்ளுதல் அல்லது மற்றும் தேர்தல் ஆணைக் குழுவின் www.elections.gov.lk இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

| மாவட்டத்தின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் | கிராம அலுவலர் பிரிவின் பெயர் | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | J/226 நகுலேஸ்வரம், J/233 காங்கேசன்துறை மேற்கு, J/234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன்துறை தெற்கு, J/238 கட்டுவான், J/240 தென்மயிலை, J/241 வருத்தலைவிலான், J/242 குரும்பசிட்டி, J/243 குரும்பசிட்டி கிழக்கு, J/244 வசாவிளான், கிழக்கு, J/245 வாசவிலான் மேற்கு, J/246 மயிலிட்டி வடக்கு, J/248 மயிலிட்டிதுறை தெற்கு, J/249 தையிட்டி வடக்கு, J/250 தையிட்டி மேற்கு, J/251 மைலிட்டிதுறை வடக்கு, J/252 பலாலி தெற்கு , J/253 பலாலி கிழக்கு, J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வடமேல், J/256 பலாலி மேற்கு | | |
| கிளிநொச்சி | கண்டாவளை | KN 46 ஆனையிறவு | | |
| | பச்சிலைப்பள்ளி | KN 92 இத்தாவில் | KN 93 முகமாலை | KN 94 வேம்பொடுகேணி |
| மன்னார் | முசலி | MN 153 முள்ளிக்குளம் | | |

www.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் குறித்த விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம்: 011-2868441,42,43
மின்னஞ்சல் : info@elections.gov.lk
இணையத்தளம் : www.elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய.
2021.04.09

குறித்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.

யாழ்ப்பாணம் 021-2222655 கிளிநொச்சி 021-2285664 மன்னார் 023-2222289

**சரியான முறையில் பதிவு செய்துகொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.**

(C-1311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி - 2021

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

01. தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோருப்படுகின்றது.

02.தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய, 04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03.இல 1-11 வரையான கேள்விகளுக்கு கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இல 12-13 வரையான கேள்விகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனதாரராகக் காணப்பட வேண்டும்.

04.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் **(தொலைபேசி 021 224 0017)** இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 09.04.2021 தொடக்கம் 22.04.2021ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

07.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 09.04.2021 திகதியிலிருந்து 22.04.2021 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08.பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 23.04.2021ம் திகதி மு.ப 9.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09.கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு. செல்லு படியாகும் காலம்

10. கோரப்பட்ட வேலைகளில் இல 01.02 கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து கேள்விக்கு 63(அறுபத்து மூன்று - 25.06.2021) நாட்களாகும். இல 03 - 13 வரையான கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49(நாற்பத்தொன்பது - 11.06.2021) நாட்களாகும்.

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் கான கேள்விக்குட்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை ரூபாயில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | கேணியடி 1ம் குறுக்கு வீதி புனரமைப்பு - குப்பிளான். வாலி கோவில் வீதி - ஈவினை. இம்புலன் வீதி மிகுதி வேலை - ஏழாலை NP/14/41(15)/02/05/CF/2021/01 | 2.531 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 25,500.00 | 23.07.2021 |
| 2 | மட்டக்கச்சி 1ம் குறுக்கு வீதி, வில்வகுட்டையன் 3ம் வீதி - உடுவில். இணுவில் மானிப்பாய் 4ம், 5ம், 6ம் ஒழுங்கை - இணுவில் NP/14/41(15)/02/05/CF/2021/02 | 2.017 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 20,500.00 | 23.07.2021 |
| 3 | கலேட்டி வீதி (கலாநிதி குறுக்கு), தம்புவத்தை ஞான வைரவர் ஆலய வீதியும் உப ஒழுங்கையும், சைவமகாஜனா 4ம் குறுக்கு வீதி -ஏழாலை. NP/14/41(15)/02/05/CF/2021/03 | 1.626 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 16,500.00 | 09.07.2021 |
| 4 | கணக்கர் வளவு வீதி - கந்தரோடை NP/14/41(15)/02/05/CF/2021/04 | 0.789 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 8,000.00 | 09.07.2021 |
| 5 | துல்மினிய தோட்ட 2ம் ஒழுங்கை - சங்குவேலி NP/14/41(15)/02/05/CF/2021/05 | 1.222 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 12,500.00 | 09.07.2021 |
| 6 | கெம்சன் வீதி - உடுவில் வடமத்தி NP/14/41(15)/02/05/CF/2021/06 | 0.635 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 6,500.00 | 09.07.2021 |
| 7 | முத்தமிழ்மன்ற முன் வீதி - சுன்னாகம் நகர் தெற்கு சபாபதிப்பிள்ளை 6ம் ஒழுங்கை (குவாட்டாஸ் ஒழுங்கை) - இணுவில் வட கிழக்கு NP/14/41(15)/02/05/CF/2021/07 | 1.038 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 10,500.00 | 09.07.2021 |
| 8 | நந்தாவில் குறுக்கு வீதி - தாவடி NP/14/41(15)/02/05/CF/2021/08 | 1.729 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 17,500.00 | 09.07.2021 |
| 9 | பத்திரகாளி கோவில் வீதி மிகுதி வேலை - தாவடி NP/14/41(15)/02/05/CF/2021/09 | 1.312 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 13,500.00 | 09.07.2021 |
| 10 | புகையிரத நிலைய ஒழுங்கை - சுன்னாகம் கிழக்கு NP/14/41(15)/02/05/CF/2021/10 | 0.787 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 8,000.00 | 09.07.2021 |
| 11 | ஐயனார் கோவில் வீதி 1ம் குறுக்கு ஒழுங்கை - சுன்னாகம் NP/14/41(15)/02/05/CF/2021/11 | 0.786 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 19,000.00 | 09.07.2021 |
| 12 | வீதி மின் விளக்கு கொள்வனவு NP/14/41(15)/03/05/Street light/2021/0150W LED – 202 Nos | 1.874 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 19,000.00 | 09.07.2021 |
| 13 | உழவு இயந்திர இழுவைப்பெட்டி கொள்வனவு NP/14/41(15)/03/05/Tractor Tailor/2021/01 | 0.800 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 8000.00 | 09.07.2021 |

11. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 19.04.2021ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

**க.தர்ஷன்,தவிசாளர்**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-1912)




## நரி மாட்டிக்கிச்சு



ஒருநாள் சந்நியாசியும் சீடனும் ஒரு குளக் கரையை அடைந்தனர். குளத்தில் இறங்கிக் கை கால் கழுவிக் கொண்டு வருவதாக சந்நியாசி போகும்போது கரையில் இருந்த சீடனி டம் என்றும் விட்டுப் பிரியாத கந்தை முடிப்பைக் கொடுத்து, வைத்திருக்கும் படி கூறிவிட்டுப் போனார்.

சந்நியாசி கைகால் கழுவிக் கொண்டு திரும்பும் போது குளத்தின் எதிர் கரையில் இரண்டு செம்மறி ஆடுகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

ஆடுகள் இரண்டும் ஆங்காரத்தோடு விலகிப் பின் வாங்குவ தும் மீண்டும் ஓடிவந்து ஒன்றையொன்று முட்டி மோதிக் கொள்வதுமாக இருந்தன. மண்டையில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது.

தூரத்திலிருந்து இதை பார்த்துக் கொண்டிருந்த குள்ளநரி ஒன்று கீழே சொட்டும் இரத்தத்தை நக் கிச் சாப்பிட எண்ணி அங்கு வந்தது. ஆடுகள் விலகிப் பின்னடையும் போது புகுந்து இரத்தத் துளிகளை நக்கிச் சுவைத்தது. ஆடுகள் முட்டிக் கொள்ள முன்னே வரும் போது நரி தந்திரமாக பின்னே சென்று விடும். இவ்வாறு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார் சந்நியாசி.


"அடப்பாவமே! இந்தக் குள்ள நரியின் முட்டாள்தனத்தை என்னவென்று சொல்வது? ஆட்டுச் சண்டையின் மத்தியில் அது சிக்கிக் கொண்டால் நிச்சயமாக அது செத்துப் போகுமே. வேறு எதுவும் நடக்கப் போகிற மாதிரி எனக்குத் தோன்றவில்லை!' என்று எண்ணிச் சிரித்தார்.

மறுபடியும் ஆடுகள் முட்டிச் சண்டையிட நெருங்கின. இரத்தத்தைச் சுவைத்து ருசி கண்ட நரி ஆவலோடு இப்போது நெருங்கி வந்து கொண்டே இருந்தது. ஆடுகளின் மத்தியில் வசமாக மாட்டிக் கொண்ட நரி கீழே தள்ளப்பட்டு உயிரை விட்டது.

ஆட்டுச் சண்டையில் குள்ளநரி செத் தது. இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த சந்நியாசி தன்னை மறந்து நின்று கொண்டிருந்தார். இதுதான் சரியான சந்தர்ப்பம் என எண்ணிய சீடன் பண முடிப்பை எடுத்துக் கொண்டு ஓடி விட் டான்.

நரி சாகப்போகிறதே என நினைத்து, அதை வேடிக்கை பார்த்துக் கொண்டே தன்னுடைய பணமூட் டையை இழந்தார் அறிவு கெட்ட தேவசன்மா. (முற்றும்)

# மகாபாரதம்






### பாஞ்சாலி சபதம்

பீமன் எழுந்தான். "விண்ணவர்மேல்ஆணை பராசக்தி ஆணை, கண்ணன் மேல் ஆணை, எங்கள் மனைவி திரௌபதியை தொடை மீது உட்கார் என்று கூறிய துரியோதனனை போர்க்களத்தில் தொடையைப் பிளந்து உயிர் மாய்ப்பேன். சேலை பிடித்து இழுத்த துச்சாதனனின் தோள்களைப் பிளப்பேன்" என்று சபதம் செய்தான்.

அருச்சுனன் எழுந்து பாஞ்சாலியின் சேலையை அகற்றச் சொன்ன கர்ணனை போரில் [illegible] பேன். இது கண்ணன் மீதும் திரௌபதி மீதும் காண்டீபம் என்னும் என் வில் மீதும் ஆணை" என்று சபதம் செய்தான்.

பாரதப்போரில் சகுனியின் மகனான உலூகனைக் கொல்வேன் என்றான் நகுலன். சகுனியின் [illegible] என்றான் சகாதேவன்.

பாஞ்சாலியோ துச்சாதனன், துரியோதனன் இவர்கள் இரத்தத்தை கூந்தலில் தடவி குளித்து பின்னரே கூந்தல் முடிப்பேன் என்றாள்.

அவளது சூளுரையைக் கேட்டு விண்ணகம் மலர் மாரி பொழிந்தது. மண்ணகம் அதிர்ந்தது. திருதராட்டிரன் நடுங்கினான்.

பின் திருதராட்டிரன் துரியோதனனையும், துச் சாதனனையும் கண்டித்தான். பின் திரௌபதியிடம் வேண்டும் வரம் தருவதாகக் கூறினான்.

தருமரையும் எனைய சகோதரர்களையும் விடுதலை செய்ய வேண்டும்" என்றாள் திரௌபதி. சரி என்று அவர்களை விடுவித்த திருதராட்டிரன் நடந்தவற்றை கெட்ட கனவாகக் கருதி மறந்துவிடச் சொன்னான்.

இந்திரப்பிரஸ்தத்தைப் பாண்டவர்களுக்கு திருப்பி அளித்தான். அனைவரும் இந்திரப்பிரஸ்தம் திரும்பினர்.

துரியோதனன் தந்தையின் முடிவு கண்டு அதிர்ச்சியுற்றான். "எப்படியும் பாண்டவர்கள். தங்களை பலப்படுத்திக் கொண்டு நம்மை அழிப்பர். ஆதலால் அவர்களை மீண்டும் சூதாட அழைக்க வேண்டும்" என திருதராட்டிரனிடம் புலம்பினான்.

அவன் கூற்றில் உண்மை இருக்கக் கூடும் என எண்ணிய திருதராட்டிரன் பாண் டவர்களை மீண்டும் சூதாட அழைக்க ஒப்புக் கொண்டான்.

துரியோதனன் பாண்டவர்களிடம் சென்று இதைத் தெரிவித்து தருமரை மீண்டும் சூதாட ஒப்புக் கொள்ள வைத்தான். விதி...இது விதியின் செயல் என்று தான் கூற வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 09 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அது பரந்த நிலப்பரப்பில் அமைதல் வேண்டும். அது யாழ்ப்பாணத்துக்கு மாத்திரமன்றி இலங்கை முழுவதுக்குமே பயன்தரும் அளவில் பாரிய அமைப்பில் இயங்க வேண்டும். அதனை உலகநாடுகளும் பாராட்டுதல் வேண்டும் என்று அன்றொருநாள் சிந்தித்தவர் யாழ்.மாநகர சபையின் முதல்வர் சாம் ஏ.சபாபதியாவார்.

அக்காலத்தில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதல்வராக இருந்தவர் வணக்கத்திற்குரிய லோங் தந்தையார். அவர் நூலக வளர்ச்சிக்கு வேண்டியன செய்வதற்கு ஆயத்தமாயிருந்தார். இன்னும் யாழ்ப்பாணக் கச்சேரியில் காரியாதிகாரியாயிருந்த ரி. முருகேசம்பிள்ளையும் தம்மாலான உதவி செய்வதற்கு முன்வந்தார். திருவாளர் முருகேசம்பிள்ளை செய்த அளப்பரிய சேவையும், மிகப் பெரிய தொண்டினையும் விரித்து ஒரு அத்தியாயம் எழுத முடியும்.

நூலக வளர்ச்சியில் பூரண விசுவாசங் கொண்ட யாழ்ப்பாணப் பிரமுகர்கள் உற்சாகத்தோடு உதவுவதற்கு முன் வந்தனர். இதனை அறிந்த மாநகர சபையின் முதல்வர் சாம் சபாபதி 16.06.1952 இல் ஒரு பகிரங்கக் கூட்டம் கூட்டிக் நூலக வளர்ச்சி பற்றி கலந்து பேசினார்.

பாரிய நூலகத்தைக் கட்டியெழுப்புவதற்கு பல்லாயிரம் ரூபா தேவையாகும் என்றும், அதைத் திரட்டுவதற்கு ஒரு களியாட்ட விழா நடத்துவதோடு, அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் இடம் பெறுதல் நல்லதென்றும் பலரும் அபிப்பிராயம் தெரிவித்து, அமோக ஆதரவு தருவதாக கூறினார்கள்.

கார்ணிவல் என்னும் களியாட்ட விழாவை நல்ல முறையில் நடத்திப் பெருவெற்றி கண்ட லோங் சுவாமிகள் தாமும் தம் கல்லூரி ஆசிரியர்களும் முன்னின்று உதவுவதாக உறுதி கூறினார். அவர் அக்காலத்தில் கொழும்பிலிருந்த வெளிநாட்டுத் தூதுவர்களோடு நன்கு பழகியிருந்தவர்.

சாம் சபாபதி கூட்டிய கூட்டத்தின் பயனாக 'யாழ்ப்பாண மத்திய நூல்நிலைய சபை" என்னும் இயக்கம் உடனடியாக உருவாகியது. சபையின் தலைவராக நகர பிதாவும் உபதலைவராக லோங் சுவாமியும் தெரியப் பெற்றமை நூலக வளர்ச்சிக்கு வரப்பிரசாதமாயிற்று. "நாங்கள் அமைக்கப் போகும் நூல்நிலையம் தென்கிழக்காசிய நாடுகளுக்கே ஒளியூட்டும் தரமுள்ளதாகும்" என்று லோங் சுவாமிகள் பெருந்தன்மையோடு அன்று கூறினார்.

வணக்கத்துக்குரிய லோங் சுவாமிகள் நீண்ட பேச்சுப் பேசியதில்லை. பேச்சளவில் இல்லாமல் உடனடியாகவே செயலில் ஈடுபடும் இயல்பினர் அவர்.லோங் சுவாமிகள் நூலக நிபுணர்கள் பலரைக் கண்டும், கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டும் ஆக்கபூர்வமான முன்னறிவைப் பரந்த அளவில் பெற்றார்கள்.

டில்லி பல்கலைக்கழகத்து நூலகர் பேராசிரியர் கலாநிதி எஸ். ஆர். ரங்கநாதனை இங்கே அழைத்து அவரோடு நேரில் கலந்துரையாடி ஆவன செய்வதற்குச் சுவாமிகள் ஒழுங்கு செய்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் நிறுவப் போகும் இந்தப் பெரிய நூலகம், மத்திய நூலகமாய் அமையும். அது முதலில் குடா நாட்டிலுள்ள கல்லூரிகளின் நூல்நிலையங்கள், கிராம சங்க நூல் நிலையங்கள், நகர சங்க நூல் நிலையங்கள் யாவற்றுக்கும் நடமாடும் இயக்க முறையில் **(Mobile)** நூல்களை விநியோகிக்கும் என்று லோங் சுவாமிகள் அடிக்கடி கூறிவந்தார்கள்.

நூலகத்தை அமைப்பதற்கு வசதியான இடத்தைத் தேடித் தீர் மானிப்பதில் பெரிய சிக்கல்கள் உண்டானது. நூலக சபையினரே தம்முள் குசுகுசு கூட்டங்கள் கூடி அங்கே இங்கே என்று இழுபறி பட்டனர்.




### நூலகக் கட்டட இடத்தெரிவு

ஒரு சாரார் இன்றைய மாநகர சபை மண்டபத்தின் தென்பகுதியில் உள்ள பழைய ஒல்லாந்தர் இடுகாட்டைச் சுத்தப்படுத்தி அதிலே நூலகத்தை அமைத்தால், கடற் காற்றும் உண்டு என்றனர். இன்னொரு சாரார் சுப்பிரமணியம் பூங்காவுக்கு கிழக்குப் பக்கத்தில் பெட்டிக் கடைகள் உள்ள தெருக்கிடத்தில் உயரமான மாடிக்கட்டடம் கட்டலாம் என்றனர். இன்னும் சிலர் இன்று நூலகமுள்ள பழைய முற்றவெளியைக் குறிப்பிட்டபோது, வேறு சிலர் அப்படியானால் நூலகம் முனியப்பர் கோயிலை மறைக்கும் என்றனர்.

இவ்வாறாக நூலகம் அமைவதற்கு நல்ல இடம் தேடி நான்கு பேர் நிச்சயிக்க முடியாத வேளையில், இதனை நிச்சயிக்க வல்லவர் நிபுணராயுள்ள நகர் நிர்மாண உத்தியோகத்தரேயாவர் எனத் தீர்மானித்து அரசினர் நகர் நிர்மாண நிபுணர் வீரசிங்கா என்பவரை அழைத்தனர். நகர் நிர்மாண நிபுணர் யாழ்ப்பாணத்துக்கு வந்து நான்கு மூலைகளையும் நன்கு ஆராய்ந்து நூலகம் நகரத்தின் நடுவிலேயே அமைதல் வேண்டும் என்று கூறி முனியப்பர் கோயிலுக்குக் கிழக்கில் இருந்த முற்றவெளியையே உரிய இடம் என நிச்சயித்தார். இதனைக் கட்டடக்கலை நிபுணர் நரசிம்மனும் நல்லது என்றார்.

முற்றவெளியை இழந்தாலும் நூலகம் வளர்ந்தால் போதும் எனச் சபையினர் சம்மதித்தனர். இந்த இடத்துக்குத் தெருக்கள் வசதியாக இருந்தமையும் மேலதிக அகலிப்புக்குப் போதிய நிலம் வசதியாக இருந்தமையும், சாதகமானவை என நரசிம்மன் தனது தனிப்பட்ட முறையில் தேநீர் விருந்தில் தெரிவித்தார்.

### நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா

செயல் வீரரான நகரபிதா சாம் சபாபதி உடனடியாகக் கட்டட வேலையை ஆரம்பித்தல் வேண்டும் எனக் கூறியதும், லோங் சுவாமிகள் அப்படியே ஆகுக என்று ஆசீர்வதித்தார்.

சைவ ஆசார முறைப்படி அத்திபாரம் வெட்டிப் பத்திரிப்பு வரை கட்டடத்தின் அடிக்கல் நாட்டுவிழா 29.03.1954 ஆம் ஆண்டு நடை-பெற்றது.

நூல்நிலையச் சங்கத் தலைவர் மாநகரசபை முதல்வர் சாம் சபாபதி, வணக்கத்துக்குரிய தந்தை லோங், மாட்சிமை தங்கிய பிரித்தானிய ஸ்தானிகர் சேர் செசில் சையெஸ், மாட்சிமை தங்கிய அமெரிக்கத் தூதுவர் **H. E.** பிலிப் குறோவ், மாட்சிமை தங்கிய இந்தியத் தூதுவரின் முதல் செயலாளர் ஸ்ரீ சித்தார்த்த சாரி ஆகிய ஐவரும் அடிக்கல்லைத் திரை நீக்கம் செய்து வைத்தார்கள்.

அடிக்கல் நாட்டு விழாவின் போது அமெரிக்க உதவியாக 22,000 டொலர் கிடைத்தது. அது அக்காலத்து இலங்கை நாணய மதிப்பில் ஒரு இலட்சத்து நான்காயிரம் (104,000/=) ரூபாயாகும். இந்தியாவின் நன்கொடையாக சித்தார்த்த சாரி 10,000 ரூபாய் உதவினார். அமெரிக்கரின் நன்கொடைப் பணம் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூலக வாசல் முகப்பில் துலாம்பரமாகப் பொறிக்கப் பெற்றிருந்தது. இப்போது தமிழ் இல்லை. ஆங்கிலத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**"A generous gift of 104,000 by the Asian Foundation formed the nucleus of the fund for the construction of this Library"**

இந் நூலகத்துக்கு பழைமை வாய்ந்த அரிய நூல்கள் கோப்பாய் வன்னியசிங்கம், வவுனியா பண்டிதர் இராசையனார், முதலியார் குலசபாநாதன் ஆகியோர் நினைவாக அவர்களிடமிருந்து பெறப்பட்டன.

### அதிவண. லோங் அடிகளார் பற்றி சில வரிகள் .....

1990ஆம் ஆண்டு.தேசிய வீரர் தினத்தன்று (22.05.1990) அதிவண. லோங் அடிகளார் நினைவாக முத்திரையொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

வெளி நாட்டவர் ஒருவர் நமது நாட்டின் தேசிய வீரராகக் கணிக்கப்படுகின்றாரெனின் அவர் எமது நாட்டு மக்களுக்கு ஆற்றிய சேவை அளப்பரியதாக இருக்கவேண்டும். அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் இருந்து கொண்டே இத்தகு சேவையை வழங்கினார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 136 மில்லியன் ரூபாவை வங்கிக் கணக்கில் வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றுள்ள போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரால் அனுப்பப்பட்ட நிதியை தமது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்தவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ரத்மலானை - தர்மாராம பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். அவரது வங்கிக் கணக்கில் 136 மில்லியன் ரூபாய் வைப் பிலிடப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, குறித்த வங்கிக்கணக்கின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

## வர்த்தக நிலையத்தில் தீப்பரவல்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை பிரதேசத்திலுள்ள பிளாஸ்டிக் பொருள் விற்பனை நிலையமொன்றில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, 8 தீயணைப்பு வாகனங்களை ஈடுபடுத்தி தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரண்டு மாடிக் கட்டடமான இந்த வர்த்தக நிலையத்திலிருந்த பெரும்பாலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

## மின்சார சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சிலர் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பளம் அதிகரிக்காமை உள்ளிட்ட பல விடயங்களை முன்வைத்து நேற்று சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக இலங்கை மின்சார சபைத் தொழிற்சங்க ஒன்றியத்தின் நடவடிக்கைக் குழு ஏற்பாட்டாளர் ரஞ்ஜன் ஜயலால் குறிப்பிட்டார். (நி-4)

# இந்து கற்கைகள் பீடம்

### இந்துக் கற்கைகள் பீடத்தின் முன்மொழியப்பட்ட கட்டடத்திற்கான முகப்பு வடிவமைப்பின் வரைவு தொடர்பான மாதிரி உருவுக்கான விண்ணப்பம்

இலங்கை வாழ் இந்து சமூகத்தின் பண்பாட்டு நிலைக்களனாகவும் புலமைத்துவ மையமாகவும் தகவமைந்து மிளிரும் பொருட்டாய் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் நிறுவப்பட்டது. சேர்.பொன்.இராமநாதனின் அபிலாசைகளைக் கருத்தில் நிறைத்துக் காலந்தோறும் வழிகாட்டிய 'ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர்களின் ஆலோசனைகளால் ஆற்றுப்படுத்தப்பட்டு செழுங்கலை நியமமாகும்' முனைப்போடு எமது பீடம் இன்று எழுந்து நிற்கின்றது.

இருப்பு என்பது வெறுமனே கருத்தியற்றளத்தில் மட்டும் அமையும் ஆயின் அது கனவாகவே கருதப்படும். செயல் முனைப்பும் நிறுவன மயமாக்கலும் திட்டமிடுதலும் பொருள்சார் பரிமாணங்களுடன் இயைபுற்றவை. அந்த வகையில் எமது பீடத்தின் இருப்புக்கான கட்டுமானத் தொகுதிகளை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக அமையவிருக்கும் இந்துக் கற்கைகள் பீட 'கட்டடத்திற்கான முகப்பு மாதிரித் தோற்றம்' குறித்த வரைபு சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. கீழே '# தொடர்பான விடயங்கள்' என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைக் கருத்திற் கொண்டு முகப்புத் தோற்றத்தினை வரைந்து பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (021-221-2396) எனும் முகவரிக்கு 05.05.2021 இற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

தெரிவு செய்யப்படும் முகப்பு மாதிரித் தோற்றத்தினை சமர்ப்பித்தவருக்கு பல்கலைக்கழக கௌரவிப்பும் பணப்பரிசிலும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு **www.jfn.ac.lk**

**# தொடர்பான விடயங்கள்**

1. முகப்புத் தோற்றம் அமையவுள்ள இடத்தின் பரப்பளவு
நீளம்: 50 அடி அகலம்: 30அடி
2. நீளப்பகுதி முன் பகுதியாகக் கருதப்படும்.
3. மொத்தமாக நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடத்திற்கான முகப்புத் தோற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.
4. யாழ்ப்பாணத் தமிழ்க் கலாசாரத்தினையும் இந்துக்களின் கட்டடக் கலை மரபுகளையும் முன்னிலைப்படுத்தி முகப்பு அமைக்கப்பட வேண்டும்.
5. தங்களினால் சமர்ப்பிக்கப்படும் முகப்புத் தோற்றத்தின் வடிவமைப்புக்களின் மாதிரிகளுக்கான விளக்கங்களும் தெளிவான முறையில் வழங்கப்பட வேண்டும்.
6. ஒருவர் எத்தனை முகப்பு மாதிரிகளையும் அனுப்பி வைக்க முடியும்.
7. அனைத்து மாதிரிகளும் **A3 (29.7cmx42cm)** அளவு தாளில் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (C-1914)

# செய்தித்துளிகள்

## போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

ருவன்வெல்ல பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார். ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோணகல் தெனிய பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது போலி நாணயத்தாள்களுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டிகை காலத்தில் இவ்வாறான போலி நாணயத்தாள் மோசடிகள் இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது. அதனால் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். (நி-4)

## துணி இறக்குமதிக்குத் தடை

(கொழும்பு)

துணி இறக்குமதியை அரசாங்கம் தடைசெய்துள்ளதாக பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இந்த வர்த்தமானி அறிவிப்புக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அனைத்து துணிகள் மற்றும் அச்சிடப்பட்ட பற்றிக் இறக்குமதிகள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

## தேரர் உட்பட இருவர் கைது

(கொழும்பு)

ஜம்புரேவெல சந்திரரதன தேரர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பு - கோட்டை பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கோட்டை பொலிஸாரின் வாகனமொன்றுக்கு சேதம் விளைவிக்கப்பட்ட குற்றச்சாட்டுடன் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 180 | 240 |
| தக்காளி | 60 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 170 | 160 | 200 |
| பூசணி | 65 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 50 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 260 | 280 | 320 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 120 |
| பாகற்காய் | 240 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 |
| பயற்றங்காய் | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 |
| போஞ்சி | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 180 | 280 |
| முள்ளங்கி | 40 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 20 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு இலட்சத்துக்கு மேல் தொற்று


(டில்லி)

இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 789 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்று முந்தினம் மட்டும் 685 பேர் கொரோனாவுக்குப் பலியாகியுள்ளனர்.

தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 29 இலட்சத்து 28 ஆயிரத்து 574 ஆக அதிகரித்துள்ளது. (நி-4-8)

# மெக்ஸிக்கோ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பாரிய தீ விபத்து



(மெக்சிக்கோ சிற்றி)

கிழக்கு மெக்ஸிகன் மாநிலமான வெராக்ரூஸின் மினாடிட்லான் நகரில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தீ விபத்துக்குள்ளாகியுள்ளதாக நாட்டின் பாதுகாப்பு, எரி சக்தி மற்றும் சுற்றுச் சூழல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

லாசரோ கார்டனாஸ் என்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமே நேற்று முன்தினம் புதன் கிழமை பிற்பகல் தீப்பிடித்து எரிந்துள்ளதாகவும் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையினை படையினர் முன்னெடுத்து வருவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சம்பவத்தினால் இதுவரை எந்த உயிரிழப்புகளும் ஏற்பட்டதாக பதிவாகவில்லை. (நி-4-8)

## இந்தியாவுக்கு பயண தடை

(வெலிங்டன்)

இந்தியா உட்பட தென்னாசிய நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் தீவிரமாகப் பரவி வரும் நிலையில் இந்தியாவில் இருந்து வருவோருக்கு நியூசிலாந்து 14 நாட்கள் தற்காலிகத்தடை விதித்துள்ளது என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டும் இந்தியாவிலிருந்து வந்த 17 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## பிரேசிலில் ஒருநாளில் 4 ஆயிரத்துக்கு மேல் உயிரிழப்பு

(பிரேசிலியா)

பிரேசிலில் வைரஸ் பரவத் தொடங்கியதில் இருந்து இதுவரை இல்லாத வகையில் நேற்று முன்தினம் மட்டும் 4 ஆயிரத்து 195 பேர் கொரோனாவுக்குப் பலியாகினர்.

இதனால் அந்த நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 37 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

ஆனால் இப்போதும் கூட ஜனாதிபதி ஜெயிட் போல்சனரோ ஊரடங்கை அமுல்ப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

# 14 தங்கப்பதக்கங்களை வென்ற விவசாயி மகன்



(டில்லி)

கர்நாடக மாநிலம் குனூர் என்ற குக்கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவரின் மகன் தோட்டக்கலைத்துறையில் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

இதைப் பாராட்டி அவருக்கு 14 தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டது. இதுகுறித்து பிரசாந்த் கூறுகையில்,

விவசாயத்தில் நான் சாதிக்க விரும்பினேன். விவசாயத்தில் பலரும் பாரம்பரியமாக ஒரே பயிரை சாகுபடி செய்து வருகிறார்கள். இது பல சிக்கல்களை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது.

அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்களை வழங்கும் வகையில் விவசாய விஞ்ஞானியாக மாறுவதே எனது குறிக்கோள் என்று அவர் தெரிவித்தார். (நி-4-8)

## நரேந்திர மோடிக்கு இரண்டாவது டோஸ்



(டில்லி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று வியாழக்கிழமை டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் இரண்டாவது டோஸ் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

இவர் மார்ச் முதலாம் திகதி கோவெக்சின் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

# fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2278 facebook

**நிவேதா**

கர்மா



நல்லதோ கெட்டதோ நீங்கள் கொடுத்தது உங்களுக்கு திரும்பி வந்தே தீரும்.

**ஆரவ்**

காதலிப்பதை விட, கல்யாணம் பண்ணிகிறதே மேல்...



எவன் மனைவிக்கோ செலவு செய்வதைவிட... நம் மனைவிக்கு செலவு செய்துவிட்டு போகலாம்.

**சுமதி**

காதல் தோல்வியால் காகம் தற்கொலை செய்து கொள்ளுமா?



இதுவரை உலகம் அறியா தெய்வீக காதல் சரித்திரம்!

**மகேஷ்**

உயரப்போகும் போது உதவும் உறவைவிட...



விழும்போது தாங்கும் உறவு சிறந்தது.

**கமலா**

நீங்க கொடுத்த செக் பாங்கில பணம் இல்லைனு சொல்லி திரும்ப வந்துடுச்சி...



பொய் சொல்றாங்க! கஷியர்கிட்ட நிறைய பணம் இருக்கு! நானே பார்த்தேன்...

**வருண்**

ஆசைகளை துறந்தவன்தான் புத்தன் என்றால்...



மிடில் கிளாஸ் குடும்பத்தில் பிறந்தவர் எல்லோருமே புத்தன்தான் சேர்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தின் வழி நில்! அஞ்ச வேண்டாம், உன் இலட்சியமெல்லாம் உன் தேசத்தை, உன் கடவுளை, உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும்.

– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.மாநகர முதல்வரின் புதிய திட்டத்தை வரவேற்போம்

யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி விசுவலிங்கம் மணிவண்ணன் அவர்கள் யாழ்.மாநகர காவல்படை என்ற அணியொன்றை உருவாக்கியுள்ளார்.

யாழ்ப்பாண் மாநகரின் தூய்மை கருதி யாழ்.மாநகர காவல் படை உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர முதல்வரின் சிறப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள காவல் படை காலத்தின் தேவை என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்.

தவிர, நல்ல திட்டங்களை கொண்டு வரும் போது அதனை வரவேற்கின்ற மனப்பக்குவம் எங்கள் அனைவரிடமும் இருப்பது அவசியமாகும்.

அந்த வகையில் யாழ்ப்பாண மாநகரத் தூய்மையைப் பாதுகாக்கும் வகையில் யாழ். மாநகர காவல்படையை உருவாக்கியிருப்பதற்கு அனைத்துத் தரப்புகளும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவது கட்டாயமானது.

யாழ்ப்பாண மாநகர சபையைப் பொறுத்தவரை தற்போது கழிவகற்றல் முகாமைத்துவம் மிகச் சிறப்பாக நடந்தாகிறது.

எனினும் பொறுப்பற்ற சிலர் தங்கள் வீட்டுக் கழிவுகளை வீதியில் கொட்டிவிட, அவற்றைத் தெரு நாய்கள் அங்கும் இங்குமாக கொட்டிக் கலைத்துவிடுகின்றன.

இதனால் அப்பகுதி எங்கும் துர்நாற்றமும் அசுத்தமும் ஏற்பட்டு விடுகின்றது.

எனவே இந்தப் பொறுப்பற்ற செயல்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கான ஒரேவழி சம்பந்தப்பட்டவர்கள் மீது நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்து தண்டம் விதிப்பதாக இருக்கும்.

இதற்கு மேலாக, அரச உத்தியோகத்தர்கள் தங்கள் வீட்டுக் குப்பைகளை வீதிகளில் கொட்டுவார்களாயின், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நீதிமன்றத் தண்டனையில் அவர்களை எச்சரிக்கை செய்வதுடன், அவர்கள் வீதியில் குப்பைகளைக் கொட்டினார்கள் என்ற விடயம் அவர்களின் சுயவிபரக்கோவையிலும் சேர்க்கப்பட வேண்டும்.

அப்போதுதான் அரச பணியாளர்கள், படித்தவர்கள் தாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற நினைப்பை தங்களில் ஏற்படுத்திக் கொள்வர்.

அதேவேளை யாழ்.மாநகர காவல் படையின் ஆளணி தற்போது குறைவாக இருந்தாலும் எதிர்காலத்தில் வட்டாரத்துக்கு இருவர் என்ற அடிப்படையில் விஸ்தரிக்கப்பட்டு அவர்களுக்கு பொதுமக்கள் உடனுக்குடன் தகவல் வழங்கக்கூடியதான தொலைபேசி வசதிகளையும் செய்யும்போது; யாழ்.மாநகரத்தின் தூய்மை நிச்சயம் பேணப்படும்.

அதேநேரம் இத்திட்டம் என்றும் நிலைப்பதற்காக உரிய அங்கீகாரத்தை சம்பந்தப்பட்ட அமைச்சிடம் இருந்து பெற்றுக் கொள் வதும் அவசியமாகும்.

# மாநகர காவல் படை விவகாரம்; சபை அமர்வுகளை புறக்கணித்தது ஈ.பி.டி.பி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் நேற்றைய அமர்வுகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி புறக்கணித்துள்ளது என்று மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் முதல்வருமான திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை முதல்வரினால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாநகர காவல் படை தொடர்பில் தம்முடன் கலந்துரையாடப்படாமையே இன்றைய (நேற்றைய) புறக்கணிப்பிற்கு காரணம். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலில் ஆர்வம் செலுத்துகின்ற இளைய தலைமுறையினருக்கு சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும் என்பதற்காக சட்டத்தரணி மணிவண்ணனுக்கு ஆதரவு வழங்குவதற்கு எமது கட்சியின் தலைமை தீர்மானித்திருந்தது.

எவ்வாறெனினும், எமது கட்சியின் ஆதரவுடன் அதிகாரத்தைப் பெற்றுக்காண்டவர்கள், முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அவை தொடர்பாக எம்முடனும் கலந்துரையாட வேண்டியது தார்மீக கடமையாகும். ஆனால் காவல் படை உருவாக்கம் தொடர்பாக எம்மோடு கலந்துரையாடப்பட வில்லை.

இது தொடர்பில் எமது கரிசனையை வெளிப்படுத்தும் வகையிலேயே இன்றைய (நேற்றைய) அமர்வுகளை புறக்கணித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

(நி-4-33)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அன்பில் முழுமையாகத் திளைத்திருத்தல்

ஓர் உதாரணம் நமக்கு எழுச்சியூட்டி ஞானத்தைச் செயற்படுத்துவதில் நம்பிக்கை தருகின்றது. புன்முறுவல்தான் அதன் நிதர்சனமான அடையாளம் (அத்தாட்சி).

ஆன்மா துக்கத்தையும் அறியாது, இறப்பையும் அறியாது. எனினும் எல்லாத் தொடர்புடைய நிகழ்ச்சிகளும் அதனுள் பாய்கின்றன.

அன்பால் கட்டுண்டு இல்லாதபோது, விலகி நிற்றல் எளிதாகிறது. அன்பில் முழுமையாகத் திளைத்தாலும் குழப்பமில்லாதிருத்தல், பிறர் மீது அக்கறை கொண்டிருந்தாலும் கவலை கொள்ளாதிருத்தல், தடைகள் இருப்பினும் விடாப்பிடியாக தொடர்ந்து இருந்தாலும் மனத்தடுமாற்றமில்லாதிருத்தல் ஆகியவை ஒளி வீசும் ஆன்மாவின் தெளிவான அடையாளங்களாகும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அறுகுவெளி, அரசு உணவுக் களஞ்சியம் நாவற்குழி, ஐயனார் கோவிலடி, நாவற்குழி, கைதடி கிழக்கு பிள்ளையார் கோவில் வீதி, கைதடி மானிப்பாய் வீதி (கலைவாணி), கைதடி நவபுரம், கைதடி வடக்கு, கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம், கைதடி மானிப்பாய் வீதி கோப்பாய் வரை, கள்ளிநகர் கைதடி, கோகிலாகண்டி மங்களா பட்டறை, கோகிலாக்கண்டி துறை, குமாரகுரு வாசிகசாலை ஏ-9 வீதி மட்டுவில், நாவற்குழி லிங்ஸ் ரெடிமிக்ஸ், மட்டுவில் வாகையடி, மறவன்புலவு, கேரதீவு வீதி, மறவன்புலவு மத்தி, மறவன்புலவு, நாவற்குழி சந்தி, நாவற்குழி கேரதீவு வீதி, முதியோர் இல்லத்தடி கைதடி ஏ-9 வீதி, நாவற்குழி சங்கன் கட்டுமானம், தச்சன்தோப்பு கேரதீவு வீதி, தனங்கிளப்புகைதடி, நாராயணா வன்பொருள் கைதடி நுணாவில், கணபதி ஆலை, கொற்றாவத்தை, நவிண்டில்- உடுப்பிட்டிவதிரி வீதி, பொலிகண்டி, நயினாதீவு ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அறவந்துலாவ, எல்லப்பர் மருதங்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இரு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது

(நெளுக்குளம்)

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் வாள்வெட்டில் ஈடு பட்ட இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த நான்காம் திகதி இளைஞர் குழு ஒன்று இளைஞர் ஒருவரை கண் மூடித் தனமாக கோடரியால் தாக்கியதில் அவர் படுகாயமடைந்திருந்தார்.

எனினும் வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் தொடர்பான தகவல்களை வழங்க பொதுமக்கள் அஞ்சியதால் பொலிஸாரால் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் நேற்று அதிகாலை குறித்த சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (5-4-299)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**கற்பூரம் எரிப்பதன் தத்துவம்: கற்பூரம் நெருப்பில் எரிந்து கரியோ சாம்பலோ இல்லாமல் மறைந்துவிடுகிறது. அதுபோல் ஆன்மா இறைவனுடைய அருட்ஜோதியில் கரைந்து ஒன்றுபடவேண்டும் என்ற குறிப்பைக் கற்பூரம் உணர்த்துகின்றது.**

**தீதணையாக் கற்பூர தீபமென நான் கண்ட ஜோதியுடன் ஒன்றி துரிசறுப்பது எந்நாளே!**

**- தாயுமானவர்**

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பூஜையின் போது செய்யக்கூடாதவை?

சுப்ரபாதத்தை தினமும் காலை வேளையில் மட்டுமே கேட்க வேண்டும். அவ்வாறு கேட்க முடியாத நிலையில் மாலையில் கேட்பது அவ்வளவு உசிதமானதல்ல எனப்படுகிறது.

பகவானின் மந்திரத்தை சொல்லி பிரார்த்திக்க தெரிந்தவர்களுக்கு எப்போதும் எல்லாமே வெற்றி தான். காலையில் விழித்தவுடன் நாராயணனையும் இரவு தூங்கு முன் சிவபெருமானையும் நினைக்க வேண்டும்.

கஷ்டங்கள் நீங்க, நினைத்தது நடக்க எளிய வழி தீபம் ஏற்றுவதுதான். தீப ஒளி இருக்குமிடத்தில் தெய்வ அனுக்கிரகம் நிறைந்திருக்கும். வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தீபம் ஏற்றி வைக்கலாம்.

தீபத்தில் உள்ள எண்ணெய் தான் எரிய வேண்டுமே தவிர திரி அல்ல. திரி எரிந்து கருகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். விளக்கை ஏற்றும் போது வீட்டில் பின் வாசல் இருந்தால் அதன் கதவை சாத்தி விடவேண்டும்.

காலையில் நின்று கொண்டு செய்யும் ஜெபத்தால் இரவில் செய்த பாவமும், மாலையில் உட்கார்ந்து கொண்டு செய்யும் ஜெபத்தால் பகலில் செய்த பாவமும் தொலைகிறது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை

## யோகங்கள் ஏற்பட யோசித்துச் செயற்படுங்கள்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**மிதுன இராசி வாசகர்களே!**

பிறக்கும் புத்தாண்டு, உங்களுக்கு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தோடு பிறக்கின்றது. அதே நேரத்தில் கும்பத்தில் அதிசாரமாக சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே அஷ்டமத்துச் சனியால் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. என்றாலும் பிரச்சினைகள் தொடர்ச்சியாக வந்துகொண்டுதான் இருக்கும். குடும்பச்சுமை கூடும். கொடுக்கல் - வாங்கல்களில் விழிப்புணர்ச்சியோடு இருந்தால்தான் விரயங்களில் இருந்து தப்பிக்க முடியும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், சூரியனோடு இணைந்து புத - ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். ஸாபாதிபதி செவ்வாய், விரயாதிபதி சுக்கிரனோடு பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார். இதன் விளைவாக விரயத்திற்கேற்ப இலாபம் வந்து கொண்டேயிருக்கும். எந்த ஒரு காரியத்தையும் கையில் பணத்தை வைத்துக் கொண்டுதான் தொடங்க வேண்டும் என்பது நியதி. ஆனால் உங்களுக்கு ஆண்டு தொடக்கத்தில் கிரக நிலைகள் சாதகமாக இருப்பதால் காரியத்தை தொடங்கி விட்டால், உங்களது முயற்சியின் விளைவாக அதற்குரிய தொகை எப்படியாவது கிடைத்து விடும். கிரக நிலைகளின் பலத்தை அறிந்து அதற்குரிய தெய்வ வழிபாடுகளை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்ளுங்கள்.

6 இல் கேதுவும் 8இல் சனியும் இருக்கும் இந்த வேளையில், சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கமும் மேலோங்கி இருக்கின்றது. எனவே இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், வாகன மாற்றம், தொழில் மாற்றம் போன்றவற்றில் ஏதேனும் ஒரு மாற்றத்தை சந்திக்க நேரிடும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது, எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கும்.

### குருவின் வக்கிர இயக்கம்

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். அதோடு 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். மீண்டும் 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு, கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர். எனவே அவர் வக்கிரம் பெறும் பொழுதெல்லாம் நன்மைகளே நடைபெறும். குறிப்பாக திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெற வழிபிறக்கும். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்ப முடியாமல் தத்தளித்தவர்களுக்கு, சாதகமான சூழல் உருவாகும்.

### குருப்பெயர்ச்சி காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குருபவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, அதன் பிறகு 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது குருவின் பார்வை உங்கள் இராசியிலும் 3, 5 ஆகிய இடங்களிலும் பதிகின்றது.

உங்கள் இராசியில் பதியும் குரு பார்வையால், உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். திடீர் திருப்பங்கள் ஏற்படும்.

குருவின் பார்வை 3 ஆம் இடத்தில் பதிவதால் வழக்குகள் சாதகமாக முடியும். வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள நல்ல சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். [illegible] பலப்படும். [illegible] யலில் இருப்பவர்களுக்கு, புதிய பொறுப்புகள் வரலாம். வெற்றிகள் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியங்கள் இப்பொழுது நடைபெறும். உத்தியோகம் சம்பந்தமாக நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர்களுக்கு, இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். இதுவரை பாகப்பிரிவினையில் தலையிட்ட மூன்றாம் நபர்கள் விலகிவிடுவர். நீங்களே நேரடியாக முடிவெடுத்து சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் கவனம் செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் ஏற்பட்ட தற்காலிக இடமாற்றம் மாறுதலுக்குள்ளாகும்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் குரு வருகின்றார். எனவே அக்காலத்தில் விழிப்புணர்ச்சி அதிகம் தேவை. தொழிலில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம்.

### ராகு-கேது பெயர்ச்சி காலம்

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை இலாப ஸ்தானத்தில் ராகுவும் பஞ்சம ஸ்தானத்தில் கேதுவும் வருகிறார்கள். பொதுவாக 11 இல் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பணவரவு திருப்திகரமாகவே இருக்கும். தொழிலிலும் இலாபம் கிடைக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வெளிநாடு அல்லது வெளிமாநிலங்களுக்கு சென்று குடியேற நினைத்தவர்களுக்கு, கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் தேடி வரும். 'இந்த தொழிலில் இவ்வளவு இலாபமா?' என்று ஆச்சரியப்படும் விதத்தில் தொழில் [illegible] மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.




### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அஷ்டமாதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான் என்றாலும் பாக்கிய ஸ்தானாதிபதியாகவும் சனி விளங்குவதால் இக்காலத்தில் மன நிம்மதி கொஞ்சம் குறையும். அதிக முயற்சி செய்தும் ஒரு சில காரியங்கள் தாமதப்படும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.4.2021 முதல் 3.6.2021 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை செவ்வாய்- சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் பகைக் கிரகங்களின் பார்வை இருப்பதால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர், திடீரென எடுக்கும் முடிவுகளால் செலவுகள் அதிகரிக்கலாம்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தோடு தொடங்குவதால், மனக்குழப்பம் அதிகரிக்கும். விரயங்கள் கூடுதலாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவதன் மூலமே வாழ்வில் அமைதி காண இயலும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வாத உணவுகளை உட்கொண்டு உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். நிதிப் பற்றாக்குறை நீங்கும். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்காது. சகப் பணியாளர்களால் தொல்லைகள் உருவாகும். சனிக்கிழமை விரதமும் அனுமன் வழிபாடும் சந்தோஷம் வழங்கும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

சனிக்கிழமை தோறும் இலட்சுமி நரசிம்மரை வழிபாடு செய்து வாருங்கள். மேலும் யோக பலம் பெற்ற நாளில் யோக நரசிம்மர் வழிபாட்டை மேற் கொண்டால் தேகநலம் சீராகும். செல்வ வளம் பெருகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோண்டாவிலைச்...

பெண் ஒருவர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் மேற்கு, காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த 79 வயதுடைய பெண்ணே சிறுநீரக செயலிழப்பினால் உயிரிழந்துள்ளார்.

அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ம-18,33)

## 136 பேருக்கு...

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆய்வுகூடத்துக்கு ஆயிரத்து 3 பேரின் மாதிரிகள் நேற்று முன்தினம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 129 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் பாரதிபுரம் என்ற பகுதியில் 88 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 3 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 26 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த தொற்றாளர்களில் 20 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இதன்மூலம் கடந்த 14 நாட்களில் யாழ்ப்பாணம் மாநகர கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 87 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 352 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 8 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட நான்கு பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 3 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.(ம-18,33)

## மணிவண்ணன்...

மாநகர சபை முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இருவரும் நேற்றிரவு 8 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு சமுகமளித்து தமது வாக்குமூலத்தை வழங்கியிருந்தனர்.

இலங்கை பொலிஸுக்கு ஒத்ததாக யாழ்ப்பாணம் மாநகர காவல்படை அமைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

தமிழீழ காவல்துறையின் சீருடையை ஒத்த சீருடையை அணிந்திருந்தனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-33)

## யாழ்.மாநகரில்...

யாளர்கள் பிசிஆர் பரிசோதனைக்கு தம்மை ஈடுபடுத்தவில்லை. மேலும் 300 பேர் வரை இரண்டாவது பிசிஆர் பரிசோதனைக்கு முன்வரவில்லை.

அவர்கள் அனைவரும் வர்த்தக நிலையங்களைத் திறக்க நேற்று அனுமதிக்கப்படவில்லை.

மேலும் இன்று அவர்களிடம் மாதிரிகளைப் பெற யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியினால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-33)

## 94 ஆயிரத்தை...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 94 ஆயிரத்தை கடந்து 94 ஆயிரத்து 253 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## கொரோனா...

யல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 593ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## கடற்றொழிலுக்கு...

மூவரும் நேற்றுக் காலை 8 மணிக்கு கரை திரும்ப வேண்டிய நிலையில் இரவு வரை தொடர்புகளின்றி உள்ளனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கற்கோவளத்தைச் சேர்ந்த வல்லிபுரம் பழனிவேல் (வயது-47), கந்தகாமு சோதிலிங்கம் (வயது-47) மற்றும் க.தவச்செல்வம் (வயது-40) ஆகிய மூவரையே காணவில்லை என உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீனவர்கள் மூவரையும் தேடி கடற்படையினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-33)

## காவல்படை...

இதற்கமைய நகர முதல்வர், நகர ஆணையாளர் உள்ளிட்ட சில தரப்பினரிடம் வாக்குமூலங்களை பொலிஸார் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண நகரத்தை தூய்மையாகவும், அழகாகவும் பேணுவதற்காக, மாநகர சபையினால் ஐவர் கொண்ட காவல்படை அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளைக் கொட்டுதல், அசுத்தப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படவுள்ளது. (ம)

## தேசிய பாதுகாப்பு...

காப்புச் சபை பாராளுமன்றக் கட்டடத்தில் நேற்று அவசரமாகக் கூடியது.

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாநகரைத் தூய்மைப்படுத்தும் வகையில் மாநகர சபையால் நியமிக்கப்பட்டுள்ள காவல்படை தொடர்பிலும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சீருடை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்தும் விசேடமாக ஆராயப்பட்டது.

இதன் போது தேசிய பாதுகாப்புக் கருதி சில முடிவுகள் எடுக்கப்பட்டன எனவும், அவை விரைவில் வெளியாகும் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்ட முக்கிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.(ம-3)

## யாழ்...

என.

கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக அடையாளம் காணப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர் அல்லது பணியாளர் உள்ள சுமார் 70 வர்த்தக நிலையங்களுக்கு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளன.

அவை தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மீளத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# ஜெனிவா நெருக்கடி அரசுக்கு முதல் சந்தர்ப்பம் அல்ல

## தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

ஜெனிவா நெருக்கடிகளை எமது அரசாங்கம் சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இது வல்ல. ஆனால் ஜெனிவா விவகாரங்களை கையாள எமது தூதரகம் மிகச் சரியான வேலைத்திட்டத்தை கையாண்டதென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் ஜெனிவா விவகாரம் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜயசிறி வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் வழங்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். (ம)

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகர மத்திய பேருந்து நிலையத்திலிருந்து நேற்று தொடக்கம் பேருந்து சேவைகளை நடத்த வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து சேவைகளும் வழமை போன்று தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பேருந்து சேவைகளிலும் உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனை மீறினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-18,33)


த்ன நிதானய
திகதி - 2021.04.08
சீட்டிழுப்பு இலக்கம் - 488
L 15 23 43 70

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 08.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2746
U 16 47 53 65

மஹஜன சம்பத
திகதி 2021/04/08
சீட்டிழுப்பு இலக்கம் 4451
K 7 4 2 7 1 0

மெகா பவர்
திகதி 08/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0811
D 16 35 37 47 79

செவன
திகதி 08/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 329
D 19 28 36 65

அத கோடிபதி
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 1247
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 08.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 126,660,905
வெற்றி இலக்கங்கள் 05 38 49 54 R

சனிதா
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 3577
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 08.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,698,689
வெற்றி இலக்கங்கள் 05 34 49 55 E

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,172,034/=
திகதி: 08.04.2021
வெற்றி வாரம்: 3128
வர்ணம்: கபிலம்
வெற்றி இலக்கங்கள் 13 22 35 37 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,984,040

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1421
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 08/04/2021
தினம் வியாழன்
X 38 44 49 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,207,711/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 425
திகதி 08.04.2021
வர்ணம் நீலம்
A 01 05 37 6
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,044,588
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதியின் தாயாருக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தாயாருக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து நேற்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தாயாரான கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் தேவராசா தேவராணி, அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தொடர்ந்து போராடி வருகிறார். இவர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஒழுங்குபடுத்தப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு தனது கோரிக்கையை பதிவுசெய்து வருகிறார். அந்த வகையில், கடந்த செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கைதிகளுக்காக குரல் கொடுத்தார். அன்றைய தினம் இரவு இனந்தெரியாத நபர் ஒருவர் தொலைபேசி மூலம் அவரை தொடர்பு கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். பின்னர் தொடர்சியாக வேறு தொலைபேசி இலக்கங்களிலும் இருந்து அச்சுறுத்தும் வகையில் அழைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பயமுற்று, தனியாக வசிக்கும் குறித்த தாய் குரலற்றவர்களின் குரல் அமைப்பிடம் குறித்த விடயத்தை தெரியப்படுத்தினார். அந்தவகையில் குறித்த தாய் நேற்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். (ம)

# பொலிஸாரின் கடமையை காவல் படை எவ்வாறு முன்னெடுக்கமுடியும்

## சபையில் எதிர்க்கட்சி கேள்வி

ஒரே நாடு ஒரே சட்டமென்றால் இலங்கை பொலிசாரின் கடமையை எவ்வாறு யாழ். முதல்வரின் படையணி முன்னெடுக்க முடியும். யாழ். மாநகர முதல்வரால் உருவாக்கப்பட்டுள்ள "காவல்படை" பணிக் குழுவினருக்கான சீருடை புலிகளின் காவல்துறை சீருடையை ஒத்ததாக உள்ளதெனவும் எதிர்க்கட்சி உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளையில், சபை நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார். (ம)

# கொழும்பு மாநகர சபையை பின்பற்றியே சீருடை வழங்கப்பட்டது

## மணிவண்ணன் விளக்கம்

கொழும்பு மாநகர சபையினை பின்பற்றியே, யாழ்ப்பாண மாநகர கண்காணிப்பு காவலர்களுக்கும் சீருடை வழங்கப்பட்டுள்ளதாக மாநகர சபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அவர் இதனை குறிப்பிட்டார். சீருடை வழங்கிய விடயத்தில் வேறு எந்த உள்நோக்கமோ அல்லது திட்டமோ தங்களுக்கு இருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாண நகரத்தை தூய்மையாகவும், அழகாகவும் பேணுவதற்காக, மாநகர சபையினால் ஐவர் கொண்ட காவல் படை அமைக்கப்பட்டது என மணிவண்ணன் தெரிவிதத்தார். (ம)


## வீடு விற்பனைக்கு

வீரபத்திரர் வீதி, கல்வியங்காட்டில்
2 1/4 பரப்புக் காணியுடன் கூடிய
வீடு விற்பனைக்குண்டு.
(6515)
தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்
075 203 4547

## CCTV - வேலை வாய்ப்பு

Technician

அனுபவமுள்ளவர்கள் / அனுபவமில்லாதவர்கள்

தகைமைகள்:

- சிறந்த நன்நடத்தை உள்ளவராக இருக்க வேண்டும்.
- வயதெல்லை 20 - 25 வரை.
- சாரதி அனுமதிப்பத்திரம். (Light Vehicle License)
- வேலை நிரந்தரமானது,கவர்ச்சிகரமான அடிப்படைச் சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் ஏனைய அனுகூலங்கள்.

உங்கள் திறமை மற்றும் அர்ப்பணிப்புக்கு ஏற்ப சம்பளங்கள் மேலதிகமாக வழங்கப்படும்.

சம்பளம் தொடர்பான தகவல்கள் நேரில் வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு - Driller பாவித்து வேலை செய்யக்கூடிய உடற்தகுதி இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 10.04.2021 முற்பகல் 9.00 மணியிலிருந்து மதியம் 12.30 மணி வரை நடைபெறும் நேர்முகத் தேர்வில் பங்குகொள்ளவும்.

முகவரி தொடர்பான தகவல்களுக்கு மட்டும் தொலை பேசியை அழைக்கவும். (6514)

VCON IT PARK(PVT)LTD
இல. 603, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
☎-077 376 7899 / 021 211 1818

## புதிய வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில்
3 அறைகளுடன் கூடிய வீடு
விற்பனைக்கு. (6513)
077 444 9119

## EUROPEAN LANGUAGE COLLEGE



திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான
⇨ IELTS Life Skills A1, B1,
⇨ Grammar & Spoken English
⇨ Work / Student Visa விற்கான IELTS வகுப்புக்கள்.
ஆசிரியை - Mrs. N. ஜெகன் (B.A in English)
(C-1917)

19, பலாலி வீதி, அரியகுளம். 0761378760/ 021 221 7781

23/2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி. 0769370456 / 0212219497 கச்சேரி Fuel Station அண்மையில்

## தவறிவிட்டது

திருமதி சாந்தி உதயகுமார்
ஆகிய எனது முக்கிய ஆவணம்
அடங்கிய கைப்பை தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்
தொலைபேசி இலக்கத்துடன்
தொடர்பு
கொண்டு தந்துதவும். (C-1921)
076 839 9108

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும்
உணவகம் ஒன்றிற்கு ரொட்டி தயாரிப்பாளர்,
சமையல் உதவியாளர், கொத்து, பிறைட்
றைஸ் போன்ற பணி நிலைகளுக்குரிய
பணியாளர்கள் தேவை.
தகுதியுடையோர் கீழ் வரும் தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (C-1920)
077 649 1027
077 940 0963

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
உணவகம் மற்றும் தங்ககத்திற்கு
கீழ்வரும் பணியாளர்கள்
தேவை.

Supervisors,
Cooks,
Stewards,
Cleaners
(C-1922)

உணவு , தங்குமிடம்
இலவசம்.
076 138 0212


# துயர் பகிர்கின்றோம்



எமது சக தாதிய உத்தியோகத்தராகிய
திரு. ஜெயராஜன் அவர்களின்
அன்பு மனைவி

திருமதி ஜெயரூபா ஜெயராஜன்

அவர்கள் 08.04.2021 அன்று
இறைபதம் அடைந்த செய்தி கேட்டு
ஆழ்ந்த துயரடைவதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-1915)

பிறப்பு 09.09.1973 இறப்பு 08.04.2021



பிலால் ஆயரூஹம்
"A" 89 பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள்


## உடனடி வேலை வாய்ப்பு

யாழ். நகரப் பகுதியில்
இயங்கும்
தங்க நகை அடகு சேவை
நிலையத்துக்கு A/L படித்த
கனனி அறிவுள்ள பெண்
வேலையாள் தேவை. (6516)
077 784 0379

## அன்னா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1842)
070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /– பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

| | | |
|---|---|---|
| ● யாழ்ப்பாணம் | ● புத்தூர் | ● கோப்பாய் |
| ● நெல்லியடி | ● கொடிகாமம் | ● மானிப்பாய் |
| ● புதுக்குடியிருப்பு | ● சுன்னாகம் | ● கிளிநொச்சி |
| ● பருத்தித்துறை | ● வல்வெட்டித்துறை | ● சாவகச்சேரி |

(C-1841)

0768226240 DHL

## உடனடி வேலை வாய்ப்பு



V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை (C-1895)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777068777
v2vacancies@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.